தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு

ஊரக வளர்ச்சி
மற்றும் ஊராட்சித் துறை
விலை ரூ. 20/-
மலர் 24
இதழ் 08
டிசம்பர் 2022

# முற்றம்

மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான மாத இதழ்



## இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதவியேற்பு

# இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக திரு.உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பதவியேற்பு




மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு.ஆர்.என்.ரவிஅவர்கள் 14.12.2022 அன்று, ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நடைபெற்ற பதவியேற்பு விழாவில், திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பதவிப் பிரமாணமும், ரகசிய காப்புப் பிரமாணமும் செய்து வைத்தார். உடன் தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் 14.12.2022 அன்று, ஆளுநர் மாளிகையில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சராகப் பதவியேற்றுக் கொண்ட திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு மலர் கொத்து வழங்கி வாழ்த்து தெரிவித்தார். உடன் மாண்புமிகு தமிழ்நாடு ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி அவர்கள் உள்ளார்.



**திருமதி. ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்



அன்புள்ள சகோதரிகளே,

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்ற மகாகவியின் வரிகளுக்கேற்ப சுய உதவிக் குழு மகளிரான நீங்கள் பல்வேறு தொழில்களில் ஈடுபட்டு சாதனைகளைப் படைத்து வருகின்றீர்கள். உங்களின் வாழ்வாதார வளர்ச்சிக்காகவும், பொருளாதார சுயசார்பிற்காகவும் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருவதை நீங்கள் அனைவரும் அறிவீர்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களும் மாநிலம் முழுவதும் சுய உதவிக் குழுக்களின் செயல்பாடுகளை ஆய்வு செய்து வருவதுடன், அவர்களுக்கு நலத் திட்ட உதவிகளையும் வழங்கி வருகின்றனர். இதன் காரணமாக சுய உதவிக் குழுவினரான நீங்கள் ஊக்கத்துடன் செயல்பட்டு வருவதை நான் அறிவேன்.

தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் நீங்கள் தயாரிக்கும் பொருட்கள் அனைத்தும் தரமாகவும், நியாயமான விலையிலும் இருப்பதால் அப்பொருட்களை அனைத்துத் தரப்பு மக்களும் வாங்கிப் பயன்படுத்தும் வகையில், நமது தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் விற்பனைக் கண்காட்சிகள், கல்லூரிச் சந்தைகள் போன்றவற்றை நடத்தி வருகிறது. மேலும் பூமாலை வணிக வளாகங்கள், மதி அங்காடிகள் போன்றவற்றிலும் உங்களின் பொருட்களை விற்பனை செய்ய வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன.

தற்போது இணையவழியிலும் சில சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன என்பதை இத்தருணத்தில் குறிப்பிடுவதுடன், நீங்கள் தயாரிக்கும் பொருட்களின் தரத்தில் எவ்வித குறையும் இல்லாமல் அதிக அளவில் தயாரித்து விற்பனை செய்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

சுய உதவிக் குழுக்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் ஆகியவற்றின் வெற்றிகரமான செயல்பாடுகளை மாதந்தோறும் வெளியிட்டு வரும் முற்றம் இதழ் 25வது ஆண்டை நோக்கி வெற்றி நடைபோட்டு வருகிறது என்பது உங்களுக்குத் தெரியும். சுய உதவிக் குழு மகளிரின் தோழியான முற்றம் இதழின் வெற்றிப் பயணம் மேலும் மேலும் தொடர சுய உதவிக் குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள், ஊராட்சி மற்றும் பகுதி அளவிலான கூட்டமைப்புகள் அனைத்தும் சந்தா செலுத்திட வேண்டும் என்று அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஊக்கத்துடன் உழைத்து, வெற்றிகள் பல பெற்று வரும் மகளிர் அனைவருக்கும் 2023 புத்தாண்டு வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்வதுடன், தமிழர் திருநாளாம் தைப்பொங்கல் நன்னாளில் புதுப்பானையில் புத்தரிசியிட்டு பொங்கி வரும் பொங்கல் போல் உங்கள் வாழ்விலும் மகிழ்ச்சி பொங்கட்டும், பொருளாதாரம் செழிக்கட்டும் என்று வாழ்த்துகிறேன்.

நன்றி. வணக்கம்

மீண்டும் சந்திப்போம்...

அன்புடன்,

(மேலாண்மை இயக்குநர்)



**திருமதி. பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,

அன்புள்ள சுயஉதவிக்குழு சகோதரிகளே,

அனைவருக்கும் இனிய புத்தாண்டு வாழ்த்துகள். ‘ஒன்றே செய், நன்றே செய், அதுவும் இன்றே செய்’ என்ற வார்த்தைக்கு ஏற்ப சுயஉதவிக்குழுக்கள் தங்களின் செயல்பாடுகளை சிறப்பாகவும், விரைவாகவும் மேற்கொண்டு, சாதனைகளைப் படைத்து வருகின்றனர். தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தில் இணைந்துள்ள சுய உதவிக்கு ழுக்களின் செயல்பாடுகளை ஊக்குவிக்குவிக்கும் வகையில் நமது இயக்கத்தின் மூலம் பல்வேறு வாழ்வாதார மேம்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள்.

அந்த வகையில், சுயஉதவிக்குழுக்களுக்கு நமது இயக்கத்தின் மூலம் வங்கிக்கடன் இணைப்புகள் பெற்றுத்தருவதுடன், அவர்கள் தங்களின் திறன் மற்றும் அவர் வசிக்கும் பகுதியிலுள்ள மக்களின் தேவைகளை அறிந்து நுண்நிறுவனங்களை துவங்குவதற்கு சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் அடிப்படையில் ஏராளமான சுய உதவிக் குழுக்கள் மற்றும் தனிநபர்கள் நுண்நிறுவனங்களைத் துவங்கி அவற்றை திறம்பட நடத்தி தங்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு வழிவகை ஏற்படுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், சில சுயஉதவிக்குழுக்கள் மற்றும் தனிநபர்கள் தொழில் துவங்கி, அது எதிர்பார்த்த அளவு வருவாய் கிடைக்காததால், அதனை இடையிலே நிறுத்திவிடுகின்றனர். மேலும், சிலர் தொழில் துவங்கினால் தோல்வி அடைந்துவிடுவோமோ என்ற எண்ணத்தில் தொழில் துவங்குவதற்குத் தயக்கம் காட்டி வருகின்றனர்.

நம்மைப் பொருத்தவரையில் வெற்றி என்பது நம்மை உலகிற்கு அறிமுகம் செய்வது & தோல்வி என்பது நம்மை நமக்கே அறிமுகம் செய்து வைப்பது. எனவே, துவங்கிய தொழில் வெற்றிகரமாக இல்லை. அதனால் அதனை முடக்கிவிடுவது அல்லது துவங்குவதற்கு தயக்கம் இருப்பின் அது உங்களின் முன்னேற்றத்திற்கு தடைக்கல்லாக இருக்கும். நம் தொழில் மேம்பாடு அடையாததற்கு உரிய காரணத்தை ஆராய்ந்து, அத்தொழிலில் அனுபவம் வாய்ந்தவர்களுடன் கலந்தாலோசித்து தொழிலை மேம்படுத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்கிக்கொள்ள முன்வர வேண்டும். கடந்த காலத்தைப்பற்றி கவலைப்பட்டுக் கொண்டிருந்தால், அது கடுகளவும் நமக்குக் கைகொடுப்பதில்லை.

புதிதாக தொழில் துவங்கி பின்னடைவு ஏற்பட்டுவிடுமோ என்ற தயக்கத்தில் இருப்பவர்கள் ஒருபோதும் வெற்றியை பெற முடியாது. உரிய பயிற்சி, முறையான வழிகாட்டுதலுடன் தொழில் துவங்கினால் நிச்சயம் அத்தொழிலை இலாபகரமாக நம்மால் மாற்ற முடியும். இது தொடர்பான தகவல்கள் மேலும் தேவைப்படின் அந்தந்த மாவட்டத்தில் செயல்படும் தமிழ்நாடு ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் மற்றும் உதவித்திட்ட அலுவலர்களைத் தொடர்பு கொண்டு, உரிய வழிகாட்டுதல்களைப் பெறுவதுடன், கூடுதல் தகவல் தேவைப்படின் மாவட்ட தொழில் மையத்தின் மாவட்ட மேலாளரையும், வங்கிக்கடன் தொடர்பாக தாங்கள் வங்கிகணக்கு வைத்திருக்கும் வங்கியின் மேலாளரையும் தொடர்பு கொண்டு போதிய வழிகாட்டுதல்களைப் பெறலாம்.

அரசாங்கத்தின் பல்வேறு திட்டங்களின் மூலம், பெண்கள், நலிவுற்றோர், மாற்றுத்திறனாளிகள், பட்டியல் சமூகத்தினர் ஆகியோருக்கு அரசின் திட்டங்களில் முன்னுரிமை வழங்குவதுடன், கடன் / வட்டிமானியமும் வழங்கப்படுகிறது. அது மட்டுமல்லாது அரசாங்கம் மூலம் நடத்தப்படும் தொழில் முனைவுப்பயிற்சிகளின் வாயிலாக, தொழிலை பதிவு செய்தல், உரிமம் பெறுதல், மதிப்புக் கூட்டுதல், சந்தைப்படுத்துதல் உள்ளடக்கிய பயிற்சி பல்வேறு நிறுவனங்கள் மூலம் வழங்கப்படுகிறது. இதுவும் சுய உதவிக் குழுவினருக்குப் பெரிதும் பயனுள்ளதாக இருக்கும்.

வெறுமனே நின்றுகொண்டிருப்பவர்கள் காலத்தை தின்றுகொண்டிருப்பவர்கள். செயல்பட்டுக் கொண்டிருப்பவர்கள் தான் காலத்தை வென்றுகொண்டிருக்கிறார்கள். எனவே, எதையும் கடினம் என்று கலங்காதே, அங்கே தான் நம்வாழ்வை உயர்த்தும் வாய்ப்புகளும், சந்தர்ப்பங்களும் ஒளிந்திருக்கும். நம்பிக்கை என்பது வெற்றியோடு வரும். ஆனால் வெற்றி என்பது நம்பிக்கை உள்ளோரிடம் மட்டும்தான் வரும். நம்பிக்கையோடு எதையும் துவங்கினால் வெற்றி நமதாகும்.

முயற்சி செய்ய தயங்காதே, நீ முயன்றால் முள்ளும் உன்னை முத்தமிடும்.

அன்புடன்,

(பா. பிரியங்கா பங்கஜம்)

கவிதை, உடல் நல குறிப்புகள், சிறப்புக் கட்டுரைகள், சுய உதவி குழுக்கள் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள் போன்றவை குறித்த விபரங்களை சுய உதவிக் குழு உறுப்பினர்கள் தக்க புகைப்படத்துடன் அனுப்பினால் அவைகளில் தகுதி வாய்ந்தவைகள் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். சுய உதவி குழுக்களின் வெற்றிக் கதைகள், குழுவின் செயல்பாடுகள் போன்றவற்றையும் புகைப்படத்துடன் அனுப்பினால், அவைகளும் முற்றம் இதழில் பிரசுரிக்கப்படும். முற்றம் இதழ் குறித்த தங்களின் விமர்சனங்களும், ஆலோசனைகளும் வரவேற்கப்படுகின்றன.

மின்னஞ்சல் :
wdcmutram@yahoo.com
wdcmutram@gmail.com

tncdwH
Tncdw State
www.Tncdw.org
Tncdwofficial

"மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் சிறப்பான செயல்பாட்டிற்காக மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் மேற்கொண்டு வரும் ஆய்வுகள், ஊரக வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், செயல் இயக்குநர் ஆகியோர்களின் செயல்பாடுகள் மற்றும் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வழங்கப்படும் நலத்திட்ட உதவிகள் குறித்த விபரங்களை தமிழ்நாடு மாநில ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் டுவிட்டர், இன்ஸ்ட்ராகிராம் மற்றும் முகநூல் பக்கங்களை பின்தொடருங்கள்.."

## குறளும் – பொருளும்

**ஆக்கம் இழந்தேமென்று அல்லாவார் ஊக்கம்**
**ஒருவந்தம் கைத்துடையார்.**

ஊக்கத்தை உறுதியாகக் கொண்டிருப்பவர்கள், ஆக்கம் இழக்க நேர்ந்தாலும் அப்போது கூட ஊக்கத்தை இழந்து கலங்கமாட்டார்கள்.

# உள்ளே...


| | |
|---|---|
| மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்து | 7 |
| ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு | 12 |
| பாலின வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சார உறுதிமொழி ஏற்பு | 14 |
| இளைஞர் திறன் திருவிழா – 2022 | 16 |
| நுகர்வோர் உரிமை தினம் | 28 |
| பெண்களை அதிகம் தாக்கும் இரத்த சோகை நோய் | 34 |


சுய உதவிக் குழு மகளிரின் உற்ற தோழியான முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்திட அனைத்து மாவட்ட மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. அதன் அடிப்படையில் முற்றம் இதழுக்கு சந்தா சேர்ப்பதற்கு நடவடிக்கை மேற்கொண்டு, சந்தாக்களை சேர்த்த அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளுக்கும் முற்றம் இதழ் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக் கொள்கிறது.

தொடர்ந்து இவ்வாண்டும் முற்றம் இதழிற்கு சந்தா சேர்க்க நிர்ணயிக்கப்பட்டிருக்கும் இலக்கை நிறைவு செய்திட அனைத்து மாவட்டங்களின் மகளிர் திட்ட செயலாக்க அலகுகளும் நடவடிக்கை மேற்கொள்ள முற்றம் இதழின் சார்பாக கேட்டுக் கொள்கிறோம்.

முற்றம் இதழிற்கு சந்தாதாரர்களை சேர்த்து வரும் அனைத்து மாவட்டங்களின் ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், அனைத்து மாவட்டங்களிலும் செயல்படும் மகளிர் திட்ட செயலாக்க அலகுகள், உதவித் திட்ட அலுவலர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உதவி வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள், சுய உதவி குழுக்கள், கிராம வறுமை ஒழிப்புச் சங்கங்கள் உட்பட அனைவருக்கும் முற்றம் இதழ் சார்பாக நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

– ஆசிரியர், முற்றம் மாத இதழ்

தமிழ்நாடு ● மகளிர் மேம்பாட்டு ●
முற்றம்
விலை ரூ. 20/- மலர் 24 இதழ் 08
டிசம்பர் 2022

கௌரவ ஆசிரியர்கள்
திருமதி. **ச. திவ்யதர்சினி,** இ.ஆ.ப.,
மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
முதன்மை செயல் அலுவலர்,
தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம்
தலைமை செயல் அலுவலர்,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

திருமதி. **பா. பிரியங்கா பங்கஜம்,** இ.ஆ.ப.,
செயல் இயக்குநர்,
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்

திருமதி. **எம். அருணா,** இ.ஆ.ப.,
வாழ்ந்து காட்டுவோம் திட்டம்

பதிப்பாளர் மற்றும் ஆசிரியர்
**எஸ். சின்னப்பன்,** செயலர், முற்றம்

ஆசிரியர் குழு
திருமதி. **க. முத்துமீனாள்,** கூடுதல் இயக்குநர், TNCDW
திருமதி. **எஸ். கவிதா,** கூடுதல்இயக்குநர், TNCDW
**நா. அருள்ஜோதி அரசன்,** கூடுதல்இயக்குநர், VKP
**பி. மருதாசலம்,** கூடுதல் இயக்குநர், TNCDW
**ஆர். சங்கர்,**கூடுதல் இயக்குநர், TNCDW
**வி. பிச்சை,** கூடுதல் இயக்குநர், NULM

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்
நிர்வாக ஆசிரியர்
திருமதி. **ரா. ஜீவா,** பொது மேலாளர்,

நிதி நிர்வாகம்
திருமதி. **சு. இராமலெட்சுமி,** நிதி ஆலோசகர்,

பொறுப்பாசிரியர் மற்றும் மேலாளர்
**வா. ராகுலன்,** செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,

துணை ஆசிரியர் : **ஏ. கண்ணன்**
முதுநிலை கணக்காளர் : திருமதி. **சு. சசிகலா**
பிழை திருத்துபவர் : **எஸ். எஸ். ரவிச்சந்திரன்**
கணினி வடிவமைப்பு : **PRE CREATIVE**

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி :
**'முற்றம்',**
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,
அன்னை தெரசா மகளிர் வளாகம்,
வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை – 600 034.
தொலைபேசி : 044 4211 9497, 044 2817 3412 / 3413

முற்றம் இதழ் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் ஆதரவுடன் வெளியிடப்படுகிறது.

## படிப்படியான முன்னேற்றம்...

**அன்புள்ள வாசகர்களுக்கு,**

மழைக்காலம் விடைபெற்று பனிபொழிவு பருவம் தொடங்கிவிட்டது. இந்த பனிபொழிவு காலத்தை வசந்தகாலம் என கொள்ளலாம். மேற்கத்திய நாடுகளில் வசந்தகாலம் என்ற ஒரு பருவகாலம் உள்ளது. இனால் நம் நாட்டில் வசந்தகாலம் என்ற ஒரு பருவநிலை இல்லாவிட்டாலும் டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை உடலுக்கு இதமான குளிர், பூத்துகுலுங்கும் மலர்கள், மனதிற்கினிய விழாக்கள், அறுவடையை எதிர்நோக்கி நிற்கும் விளைச்சல்கள், அதிகாலையில் ஒலிக்கும் மங்கள இசை, எங்கு நோக்கினும் பசுமை, இயற்கை சீற்றங்கள் தற்காலிகமாக ஓய்ந்திருக்கும் சூழல் இவை அனைத்தும் அனைவருக்கும் மகிழ்ச்சியை கொடுக்கின்ற காலமாக இருப்பதால் இதனை வசந்தகாலம் எனவும் எடுத்துகொள்ளலாம்.

டிசம்பர் மற்றும் ஜனவரி மாதங்களில் அனுசரிக்கப்படும் அகில உலக தினங்களான எச்.ஐ.வி.எய்ட்ஸ் விழிப்புணர்வு தினம், மாற்றுத்திறனாளிகள் தினம், ஊழல் ஒழிப்பு தினம், மனித உரிமை தினம், சமூக பொருளாதார வளர்ச்சிக்கான தன்னார்வலர்கள் தினம், மனிதகுல ஒற்றுமை நாள், அதோடு, சாதி ஒழிப்புக்காக போராடிய அண்ணல் அம்பேத்கார் பிறந்த தினம், பெண் உரிமை மற்றும் சமூக நீதிக்குகுரல் கொடுத்த தந்தை பெரியார் நினைவு தினம், தேசிய இளைஞர் தினம், வாக்காளர் தினம் ஆகிய தினங்கள் அனைவருக்கும் விழிப்புணர்வை எட்டும் மாதங்களாக விளங்குகிறது.

இந்த புதிய ஆண்டு 2023-ம் ஆண்டின் கருப்பொருளாக நிலையான மற்றும் படிப்படியான முன்னேற்றம் என அறிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தினை மகளிர் சுய உதவிக் குழுக்கள் புரிந்து கொண்டு, குழு உறுப்பினர்கள் அவர்களின் குடும்பங்கள் நிலையான வளர்ச்சியை நோக்கி மேலும் மேலும் வளர்ச்சி அடைவதற்கான யுக்திகளை உருவாக்கி செயல்படுத்த கற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. கடந்த ஆண்டு நாம் செய்த சாதனைகளையும், எதிர்கொண்ட சோதனைகளையும் சீராய்வு செய்து, அதிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களை கருத்தில் கொண்டு இந்த புதிய ஆண்டை சரியான திட்டங்களோடு தொடங்குவோம்.

அன்பினை போதித்த யேசுகிறிஸ்து பிறப்பு திருநாள், புத்தாண்டு மற்றும் தமிழர்களின் முக்கிய அடையாளமான பொங்கல் திருநாள் கொண்டாடும் அனைவருக்கும் முற்றம் தனது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

இப்படிக்கு,

(எஸ். சின்னப்பன்)
ஆசிரியர், முற்றம்




# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் வாழ்த்து

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக் கொண்ட திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.



மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சராக பொறுப்பேற்றுக்கொண்ட திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 14.12.2022 அன்று தலைமைச் செயலகத்தில், 2022-23ஆம் ஆண்டிற்கான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல், நலிந்த நிலையிலுள்ள சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்குதல், துப்பாக்கிச் சுடும் வீராங்கனை செல்வி நிவேதிதா அவர்களுக்கு உயரிய ஊக்கத்தொகை வழங்குதல் ஆகிய மூன்று கோப்புகளில் கையொப்பமிட்டார். இந்நிகழ்வின் போது, மாண்புமிகு நீர்வளத்துறை அமைச்சர் திரு.துரைமுருகன், மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு.எ.வ.வேலு, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திரு. அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப., தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் மருத்துவர் கா.ப. கார்த்திகேயன், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் குழுவின் (DISHA) மாநில அளவிலான இரண்டாவது ஆய்வுக் கூட்டம்






# வானவில் மன்றம் தொடக்க விழா

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் (28.11.2022) அன்று திருச்சிராப்பள்ளி மாவட்டம், காட்டூர்பாப்பாக் குறிச்சி, அரசு ஆதிதிராவிடர் நல பெண்கள் மேல்நிலைப்பள்ளியில், அரசு பள்ளி மாணவர்களின் அறிவியல் மற்றும் கணித ஆர்வத்தைத் தூண்டும் வானவில் மன்றத்தை தொடங்கிவைத்து, மாணவர்கள் மேற்கொண்ட அறிவியல் பரிசோதனைகளைப் பார்வையிட்டார். இந்த நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஸ் பொய்யாமொழி, திருச்சிராப்பள்ளி மாநகராட்சி மேயர் திரு.மு.அன்பழகன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.திருச்சி சிவா, திரு.சு.திருநாவுக்கரசர், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.இனிகோ இருதயராஜ், திரு.எஸ்.கதிரவன், பள்ளிக்கல்வித்துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., பள்ளிக்கல்வி ஆணையர் திரு.க.நந்தகுமார்,இ.ஆ.ப., ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி மாநில திட்ட இயக்குநர் திரு.இரா.சுதன்.இ.ஆ.ப., திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எம்.பிரதீப்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.







மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் (21.11.2022) அன்று தலைமைச் செயலகத்தில், மாவட்ட அளவிலான வளர்ச்சி, ஒருங்கிணைப்பு மற்றும் கண்காணிப்புக் (DISHA) குழுவின் மாநில அளவிலான இரண்டாவது ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், ஒன்றிய அரசின் பங்களிப்புடன் தமிழ்நாட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள திட்டங்களான பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம், தேசிய நலவாழ்வு குழுமம் (National Health Mission), ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம், தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் அமலாக்கம் மற்றும் பிரதம மந்திரி முன்னோடி கிராமத் திட்டம் ஆகிய திட்டங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இக்கூட்டத்தில், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திரு.எஸ்.எஸ். பழனி மாணிக்கம், திரு. ஆ. ராசா, திரு. எம்.செல்வராஜ், திரு. பி.ஆர்.நடராஜன், திரு.சு. திருநாவுக்கரசர், திரு.தொல். திருமாவளவன், திரு.கே.நவாஸ்கனி, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.வி.ஜி.ராஜேந்திரன், டாக்டர்என்.எழிலன், திரு.டி.கே.ஜி. நீலமேகம், திரு.எம்.பூமிநாதன், திரு.ஜே. எம்.எச். அசன்மவுலானா, திரு.கே.ஏ. செங்கோட்டையன், தலைமைச் செயலாளர் முனைவர் வெ. இறையன்பு, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ. அமுதா, இ.ஆ.ப., அரசு துறைச் செயலாளர்கள், துறை தலைவர்கள், தன்னார்வதொண்டு நிறுவன பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க.ஸ்டாலின் அவர்கள் 08.12.2022 அன்று தென்காசி மாவட்டத்தில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளைப் பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, மாண்புமிகு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு.இ.பெரியசாமி, மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் திரு.கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், மாநில சிறுபான்மையினர் நல ஆணையத் தலைவர் திரு.பீட்டர் அல்போன்ஸ், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ப.ஆகாஷ், இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.



## பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பேரணி

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியரகத்தில் 03.12.2022 அன்று நடைபெற்ற பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பேரணியை மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்து விழிப்புணர்வு பதாகைகளை வெளியிட்டார். இப்பேரணியில் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பிரதீப் குமார், இ.ஆ.ப., வணக்கத்திற்குரிய மேயர் திரு.மு.அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு.அ.சௌந்தரபாண்டியன், திரு.சே.ஸ்டாலின் குமார், திரு.தியாகராஜன், திரு.ப.அப்துல் சமது, மாவட்ட ஊராட்சித் தலைவர் திரு. த.ராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி. இரா.அபிராமி, மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திரு. கி.ரமேஷ்குமார், உதவித் திட்ட அலுவலர்கள், மாவட்ட வளப் பயிற்றுநர், மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், வெஸ்ட்ரி பள்ளி, பிப் ஹீபர் கல்லூரி மாணவ – மாணவிகள், மகளிர் திட்டப் பணியாளர்கள், சமுதாய வளப் பயிற்றுநர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



## பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பிரச்சார விழிப்புணர்வு பேரணி

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு தினத்தை முன்னிட்டு ஈரோடு மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் சார்பில் 02.12.2022 அன்று ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் அவர்கள் தலைமையில் பாலின சமத்துவ உறுதி மொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதனைத் தொடர்ந்து பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பிரச்சார விழிப்புணர்வு பேரணியினை கொடி அசைத்து தொடங்கி வைத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்த ஆய்வினைத் தொடர்ந்து, மகளிர் திட்டத்தின் சார்பில் 15 சுய உதவிக் குழு உறுப்பினர்களுக்கு ரூ.1 கோடியே 3 லட்சம் கடன் உதவியினையும், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் கீழ் 5 பேருக்கு ரூ.21 லட்சம் நிதி உதவியினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்த நிகழ்வுகளில், நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை அரசு முதன்மை செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எச்.கிருஷ்ணனுன்னி,இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.










# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கிக் கடன் இணைப்பு வழங்குதல்





மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்களும், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி.செய்ந்தில்பாலாஜி அவர்களும், கோயமுத்தூர் மாவட்டத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகளை பார்வையிட்டு ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் போது, மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் கோவை விமான நிலையத்தில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் மகளிர் சுய உதவிக் குழுக்கள் உற்பத்தி செய்யும் பொருட்களை விற்பனை செய்யும் மதி அங்காடியினை திறந்து வைத்து, மாவட்டத்தில் செயல்படும் பல்வேறு சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பு ஆகியவற்றை வழங்கினர்.

இந்த நிகழ்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஆணையர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி.ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., கோயமுத்தூர் மாவட்ட ஆட்சியர் டாக்டர் ஜி.எஸ்.சமீரான், இ.ஆ.ப., மாநகராட்சி ஆணையர் மு.பிரதாப், இ.ஆ.ப., மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



# ஊரகவளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் கீழ் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்து ஆய்வு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சீரிய தலைமையின் கீழ் ஏழை எளிய மக்களின் முன்னேற்றத்திற்காக பல்வேறு திட்டங்கள் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து மாண்புமிகு ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் திரு.கேஆர்.பெரியகருப்பன் அவர்களும், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அரசு முதன்மைச் செயலாளர் திருமதி.பெ.அமுதா, இ.ஆ.ப., அவர்களும், சென்னை, சைதாப்பேட்டை பனகல் மாளிகை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அலுவலகக்கூட்ட அரங்கில் 22.11.2022 அன்று ஆய்வு மேற்கொண்டனர்.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டம், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டம் – II, பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்), பிரதம மந்திரி கிராம சாலைத் திட்டம், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), ஜல் ஜீவன் இயக்கம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி மேம்பாட்டுத் திட்டம், **பள்ளி உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம்**, தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம், தமிழ்நாடு மாநில ஊரக / நகர்ப்புர வாழ்வாதார இயக்கங்கள், தீனதயாள் உபாத்தியாய ஊரகத் திறன் பயிற்சித் திட்டம் மற்றும் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்தும். மேலும் சட்டப் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளின் நிலை குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.



இந்த ஆய்வினைத் தொடர்ந்து, 2022 நவம்பர் 25 முதல் டிசம்பர் 23 வரை நடைபெறும் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு பிரச்சாரம் குறித்த விழிப்புணர்வு சுவரொட்டிகளை மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் வெளியிட்டார்.

இந்தநிகழ்வுகளின்போது, ஊரகவளர்ச்சிமற்றும்ஊராட்சித்துறை ஆணையர் டாக்டர் தாரேஸ் அகமது, இ.ஆ.ப., தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இயக்க அலுவலர் திருமதி.எம்.அருணா, இ.ஆ.ப., ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை கூடுதல் இயக்குநர் (பொது) திரு. மணீஸ்நாரணவரே, இ.ஆ.ப., மற்றும் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், அனைத்து மாவட்ட திட்ட இயக்குநர்கள், அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.





# மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் திரு.கேஆர். பெரியகருப்பன் அவர்கள் 07.12.2022 அன்று சிவகங்கை மன்னர் மேல்நிலைப் பள்ளியில், அறியப்படாத சுதந்திர போராட்ட வீரர்கள் மற்றும் மக்கள் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வு கண்காட்சியினை துவக்கி வைத்து, புகைப்படங்களை பார்வையிட்டார். தொடர்ந்து நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில் மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு வங்கி கடன் இணைப்பு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில், சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.பி.மதுசூதன் ரெட்டி, இ.ஆ.ப., அரசு அலுவலர்கள், உள்ளாட்சிப் பிரதிநிதிகள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.






தமிழ்நாடு ஊரக மற்றும் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் சார்பில், 06.12.2022 அன்று திருப்பூர் மாவட்டம், சங்கரமநல்லூர் பேரூராட்சியில் நடைபெற்ற புதிய சுய உதவிக் குழுக்கள் அமைத்தல், சுழல் நிதி மற்றும் வங்கிக் கடன் இணைப்பு வழங்கும் முகாமில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கு.சண்முகசுந்தரம், திருப்பூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். எஸ்.வினீத், இ.ஆ.ப., ஆகியோர் கலந்த கொண்டு, சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதிகளை வழங்கினர்.இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் திட்ட இயக்குநர் திரு. இ.லட்சுமணன், மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர் திருமதி.மதுமிதா, மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் திரு. அலெக்ஸ்சாண்டர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



# பாலின வன்முறைக்கு எதிரான விழிப்புணர்வு பிரச்சார உறுதிமொழி ஏற்பு

பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு விழிப்புணர்வு குறித்த பிரச்சாரம் 25.11.2022 அன்று தொடங்கி 23.12.2022 வரை தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் நடைபெற்றது. இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்தின் போது பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிராக சமூக நிறுவனங்கள் மூலமாக தேசிய அளவிலான பிரச்சாரத்தை மேற்கொள்வதற்கான மத்திய அரசின் வழிகாட்டு நெறிமுறைகளை பின்பற்றி மாநிலம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை அமைச்சர் அவர்கள் 22.11.2022 அன்று ஊரக வளர்ச்சி இயக்குநரக அலுவலகத்தில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தின் போது, மாநில அளவிலான விழிப்புணர்வு பிரச்சார பதாகைகளை வெளியிட்டார். இந்நிகழ்வின் போது, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் அரசு முதன்மை செயலாளர் ஊரக வளர்ச்சி இயக்குநரகத்தின் ஆணையர், மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் முதன்மை இ யக்க அலுவலர், கூடுதல் இயக்குநர் (பொது) அவர்கள் முன்னிலையில் கூடுதல் இயக்குநர்கள், இணை இயக்குநர்கள், திட்ட இயக்குநர்கள் மற்றும் அரசு துறை அலுவலர்கள் மற்றும் மாவட்ட திட்ட இயக்குநர்கள் அனைவரும் விழிப்புணர்வு பிரச்சார உறுதிமொழி ஏற்றனர்.

மாவட்டந்தோறும் விழிப்புணர்வு பேரணிகள், ரங்கோலி, விழிப்புணர்வு திரைப்படங்கள் திரையிடல், இரவில் மெழுகுவர்த்திகள் ஏந்தி நடந்து செல்வது, மகளிர் குழுக்களுக்கு விழிப்புணர்வு பயிற்சி போன்றவை நடைபெற்றன.

இதன் தொடர்ச்சியாக 08.12.2022 அன்று அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில், கூடுதல் இயக்குநர்கள், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர்கள், உதவி திட்ட அலுவலர்கள், மாவட்ட வள பயிற்றுநர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவரும் பாலின அடிப்படையிலான வன்முறைகளுக்கு எதிரான உறுதிமொழி ஏற்றுக் கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து, மாவட்டம், வட்டாரம் மற்றும் கிராம அளவில் பெண்களுக்கு எதிரான வன்முறை ஒழிப்பு விழிப்புணர்வு குறித்த பிரச்சார நிகழ்வுகள் குறித்து ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.







# வணிகத் தொடர்பாளர் தேர்வுக்கான முகாம்




தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் மற்றும் இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கி இணைந்து நடத்திய வணிகத் தொடர்பாளர் தேர்வுக்கான முகாம் 02.12.2022 அன்று தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது. மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த 160 உறுப்பினர்கள் இந்தத் தேர்வில் கலந்து கொண்டனர். இம் முகாமில் பங்கேற்றவர்களில் 7 நபர்களுக்கு முதற்கட்டமாக தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குனர் திருமதி. பா.பிரியங்கா பங்கஜம், இ.ஆ.ப., அவர்கள் வணிகத் தொடர்பாளர் பணி ஆணையினை வழங்கினார்.

மீதமுள்ள நபர்களுக்கான தேர்வு முடிவுகள் ஒரு வார காலத்திற்குள் அறிவிக்கப்படும் எனவும், சுமார் 130 வணிகத் தொடர்பாளர்கள் சென்னையில் மட்டும் தேர்வு செய்ய உள்ளதாகவும் தேர்வுக் குழுவினர் தெரிவித்துள்ளனர். வணிகத் தொடர்பாளராகத் தேர்வு பெற்ற சுய உதவிக் குழுக்களைச் சார்ந்த உறுப்பினர்கள், ஏழை எளிய மக்கள் அனைவரையும் நிதி உள்ளாக்கத்தில் கொண்டுவரும் பொருட்டு, சேமிப்பு, பருவகால சேமிப்பு, காப்பீடு, இ–சேவை உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்குவார்கள். மேலும் இப்பணியின் மூலம் சேவையின் அடிப்படையில் மாதந்தோறும் வணிகத் தொடர்பாளர்கள் வருமானமும் ஈட்ட முடியும்.

இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் இணை இயக்குனர் திரு.நாராயணன், இந்தியா போஸ்ட் பேமென்ட்ஸ் வங்கியின் முதுநிலை மேலாளர் திருமதி.குருவர நாகவேணி, தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மாநில வல்லுனர்கள் திரு.க.மூர்த்தி, திரு.ரா.சுபாஷ் பாபுநாத் மங்களம், திரு.நித்யானந்தம், சென்னை மாவட்ட மகளிர் திட்ட உதவித் திட்ட அலுவலர் திரு.ரவி ஆகியோர் கலந்து கொண்டனர்.






தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்படும் தீன்தயாள் உபாத்யாய கிராமப்புற திறன் பயிற்சி (DDU-GKY) திட்டத்தின் சார்பில் 18 வயதுமுதல் 35 வயதுவரை உள்ள படித்த வேலை வாய்ப்பற்ற இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புடன் கூடிய தொழில் திறன் பயிற்சி அளிக்கும் நோக்கத்தில் இளைஞர் திறன் திருவிழாஅனைத்து மாவட்டங்களிலும் நடத்தப்படுகிறது.



### நாகப்பட்டினம் மாவட்டம்

நாகப்பட்டினம் மாவட்டம், தலைஞாயிறு பேரூராட்சி மண்டபத்தில் 26.11.2022 அன்று நடைபெற்ற இளைஞர் திறன் திருவிழாவினை நாகப்பட்டினம் மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.அ. அருண்தம்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இவ்விழாவில் கலந்து கொண்ட 603 இளைஞர்களில் 220 இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளித்திட 13 பயிற்சி நிறுவனங்களால் தேர்வு செய்யப்பட்டனர். இந்நிகழ்ச்சியில் நாகப்பட்டினம் மாவட்ட ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், உதவித் திட்ட அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



### திருவண்ணாமலை மாவட்டம்

திருவண்ணாமலை மாவட்டம், செய்யார் அரசினர் ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் 08.11.2022 அன்று நடைபெற்ற இளைஞர் திறன் விழாவில் செய்யார் சட்டமன்ற தொகுதி உறுப்பினர் திரு.ஓ.ஜோதி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதி நிதிகள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், ஆதிதிராவிடர் வீட்டு வசதி நல அலுவலர், மாவட்ட திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உதவி இயக்குநர், இயக்க மேலாண்மை அலகின் உதவி திட்ட அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.




தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில்

# மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி

**30.12.2022 முதல் 10.01.2023 வரை நடைபெறுகிறது**

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம் சார்பில், புத்தாண்டு மற்றும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, மகளிர் சுய உதவிக் குழுக்கள் தயாரிக்கும் பொருட்களின் விற்பனைக் கண்காட்சி 30.12.2022 முதல் 10.01.2023 வரை, சென்னை, நுங்கம்பாக்கம், அன்னை தெரசா மகளிர் வளாகத்தில் நடைபெறுகிறது.

இக்கண்காட்சியில், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் கீழ் அனைத்து மாவட்டங்களிலும் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்களான அரியலூர் கிரிஸ்டல் மணி மாலைகள், தஞ்சாவூர் தலையாட்டி பொம்மைகள், கடலூர் முந்திரிப் பருப்பு, தருமபுரி சிறுதானிய தின்பண்டங்கள், ஈரோடு தரை விரிப்புகள், காஞ்சிபுரம் பட்டுப் புடவைகள், கன்னியாகுமரி வாழைநார் பொருட்கள், நாமக்கல் கொல்லிமலை அரபுளி காபித்தூள், கரூர் கைத்தறி துண்டுகள், சிவகங்கை பாரம்பரிய சத்துமாவு, திருவண்ணாமலை ஜவ்வாது மலை தேன், தூத்துக்குடி பனை பொருட்கள், விழுப்புரம் சுடுமண் சிற்பங்கள், விருதுநகர் செட்டிநாடு புடவைகள், கோயமுத்தூர் மூலிகை சோப்புகள், திண்டுக்கல் சின்னாளப்பட்டி சேலைகள், திருச்சி செயற்கை ஆபரணங்கள், தேனி சானிடரி நாப்கின் மற்றும் திருநெல்வேலி அல்வா போன்ற பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டுள்ளன.

மேலும், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம், வாழ்ந்து காட்டுவோம் திட்டம் ஆகியவற்றின் வழிகாட்டுதலில் செயல்படும் சுய உதவிக் குழுக்கள், திருநங்கையர் சுய உதவிக் குழுக்களும் தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்ய உள்ளனர். பிளாஸ்டிக் பொருட்களுக்கு மாற்றாக சுற்றுச்சூழலுக்கு தீங்கு ஏற்படுத்தாத துணிப்பைகள், மஞ்சப்பைகள் விற்பனை செய்யும் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளன. பாரம்பரிய சுவை மிகுந்த உணவுகளை உண்டு களித்திட உணவு அரங்கம் போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

2022 டிசம்பர் 30ஆம் தேதி முதல் 2023 ஜனவரி 10ஆம் தேதி வரை நாள்தோறும் காலை 10.00 மணி முதல் இரவு 08.00 மணி வரை நடைபெறும் இக்கண்காட்சிக்கு அனுமதி இலவசம். இந்தக் கண்காட்சியை அனைவரும் கண்டுகளித்து, மகளிர் சுய உதவிக்குழுக்கள் தயாரித்த தரமான பொருட்களை வாங்கி பயனடைவதோடு, மகளிர் சுய உதவிக் குழுக்களின் பொருளாதார முன்னேற்றத்திற்கு உதவிட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.



மனிதனின் கண்டுப்பிடிப்புகளில் மிகச்சிறந்தது புத்தகமே” என்றார் ஐன்ஸ்டீன். படிப்புதான் ஒருவன் உயர வழி என்றவர் பெருந்தலைவர் காமராஜர் . புத்தகத்தை படித்து முடித்த பிறகே அறுவை சிகிச்சை என தனக்கான சிகிச்சையை ஒருநாள் தள்ளி வைத்தவர் அறிஞர் அண்ணா. புத்தகங்கள் படிப்பதையே வழக்கம் ஆக்குங்கள் என்றார் அப்துல் கலாம். ஆம் புத்தகங்கள் தான் அனைத்து உயர்வுக்கும் வழி. விருதுநகரில் நடைபெற்ற புத்தகக் கண்காட்சியில் சுய உதவிக் குழு மகளிரின் பங்களிப்பை காண கோடிக் கண்கள் வேண்டும் என்பதை இக்கட்டுரையில் காணலாம்.



# கோடிக் கண்கள் வேண்டும்..!

சார், இந்த புஸ்தகம் எங்க கெடைக்கும்? எம்மக வாங்கச் சொன்னா(ள்) வெள்ளந்தியாகக் கேட்டவரை நிமிர்ந்து பார்த்தார் அந்த அலுவலர். நூலின் பெயரும் நூலாசிரியர் பெயரும் எழுதப்பட்ட துண்டுச் சீட்டை நீட்டிவாறே நின்றிருந்த அந்தப் பெண் ஒங்களுக்கு தெரியாதுன்னா பரவாயில்லை. நான் யாரிட்டயாச்சும் கேட்கேன் என்று மீண்டும் பேசினார்.

வாங்கம்மா நான் வாங்கித் தாரேன் என்று அந்தம்மாவை அழைத்துக் கொண்டு அரங்கத்திற்குள் சென்றார் அந்த அதிகாரி.அவர் பெரிய அதிகாரி என்பது அந்தம்மாவுக்குத் தெரியாது.

எங்கிருந்து வர்றீங்கம்மா? என்று கேட்டார். அந்தப் பெண்மணி ஊரைச் சொன்னார். என்ன வேலை செய்யிறீங்கம்மா? என்று மீண்டும் கேட்டார்.




மொதல்ல கூலி வேலைக்குத்தான் போயிட்டிருந்தேன். குழுவுல சேர்ந்தப்பெறகு பி.எல்.எப்ல அம்பதாயிரம் கடன் ஒரு பால்மாடு வளக்கிறேன். பெறகு பேங்ல குழுக்கடன் வாங்கி அதுல முப்பதாயிரம் எடுத்து நாலு ஆடுக வாங்கி இருக்கேன். எம் மக மதுரையில காலேசில் படிக்கா. பையன் உள்ளூருல பன்னெண்டாப்பு படிக்கான். எங்க வீட்டுல அவங்க கெடச்ச வேலைக்கு போறாக. என்று தன் வரலாற்றை மூச்சு விடாமல் சொல்லி முடித்த அந்தப் பெண் மணியை வைத்த கண் மாறாமல் பார்த்தார்.

என்ன சார் இப்பிடி பாக்குறீங்க? ஏதாச்சுலும் தப்பாச் சொல்லிட்டேனா... என்று சொல்லிச் சிரித்தார்.

இல்லைமா. தப்பாச் சொல்லல. என்று சொன்னவர் நீங்க யார் கூட வந்தீங்க என்றார்.

நாங்க வேன் புடுச்சு வந்தோம் சார்

வேன் புடுச்சா.. இவருக்கு ஆச்சரியமாகி விட்டது.

புத்தகத் திருவிழாவுக்கு பள்ளிகளிலிருந்தும் கல்லூரிகளிலிருந்தும் வேன் பிடித்து வந்து கொண்டிருப்பதை பார்த்துக் கொண்டிருக்கிறார். ஆனால் எழுத்து வாசம் அறியாத இந்தப் பெண்மணி வேன் பிடித்து வந்தோம் என்று சொன்ன வார்த்தையில் ஆச்சரியப்பட்டு வேன் பிடிச்சா வந்தீங்க? எத்தனை பேர்? என்று மீண்டும் கேட்டார்.




எங்க குழுவுல இருந்து 20 பேர் வந்தோம் சார். மத்த குழுக்காரங்களும் வாராங்க. எல்லாம் அங்கங்க நிக்கிறாங்க. இந்தப் புஸ்தகத்தை வாங்கிட்டா நானும் அவங்களோட சேர்ந்திக்குவேன் என்று சொன்னவரை மேலும் தாமதப்படுத்தாமல் அவர் கேட்ட நூல்கள் இருக்கும் அரங்கிற்கு அழைத்துச் சென்றார்.

சார் இந்த புக் நாங்க பப்ளிகேஸ் பண்ணல. வேற பதிப்பகம் பண்ணுனாங்க. அவங்ககிட்டதான் கேட்கனும் என்று சொல்லி விட்டு வியாபாரத்தைத் தொடர்ந்தவரை அவங்க ஸ்டால் எங்க இருக்கு?என்று கேட்டு தன் திசை திருப்பினார்.

அவங்க வரலை.சார். வேணுமின்னா 15ம் நம்பர் ஸ்டால்ல கேளுங்க பதினைந்தாம் நம்பர் ஸ்டாலில் அந்தப் பெண்மணி கேட்ட நூலை வாங்கிக் கொடுத்துவிட்டு அவர் சென்றார்.

இது கதையல்ல; உண்மை. விருதுநகர் மாவட்டத்தில் 17.11.2022 முதல் 27.11.2022 வரை புத்தகத் திருவிழா நடைபெற்றது. 26ந் தேதி மகளிர் திட்டத்தின் சார்பாக அனைத்து ஊராட்சிகளிலுமிருந்து மகளிர் குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டார்கள். சுமார் 6,000 பெண்கள் தங்களது பிள்ளைகளோடும், கணவரோடும், உறவுகளோடும் கலந்து கொண்டார்கள். காலை 11.00 மணிக்குத் தொடங்கி இரவு 9.00 மணிவரையில் பேருந்துகளிலும், வேன்களிலும், இருசக்கர வாகனங்களிலும் வந்த வண்ணமிருந்தார்கள்.

சுற்றுலா செல்வது போல ஆர்வத்தோடு வந்து தங்களுக்குத் தேவையான புத்தகங்களை வாங்கிச் சென்றார்கள். அனைத்து ஊர்களிலிருந்தும் வந்திருந்தவர்கள் தங்கள் வட்டாரங்களைச் சேர்ந்தவர்களோடு புத்தகத் திருவிழா முகப்பில் நின்று, குழுவாய் மாவட்ட மகளிர் திட்ட இயக்குனரோடும், உதவித் திட்ட அலுவலர்களோடும் புகைப்படம் எடுத்துக் கொண்டார்கள்.

மகளிர் குழுக்கள் அமைத்திருந்த சிற்றுண்டி கடைகளுக்குச் சென்று இது நம்ம கடை. இந்தக் கடையில நாம ஏதாவது சாப்பிடணும். அதுதான் நமக்குப் பெருமை என்று பெருமித உணர்வோடு வாங்கி உண்டார்கள்.








தூரந்தொலைவிலிருந்து வந்தவர்கள் புறப்பட்டுச் செல்லும் முன் மகளிர் திட்ட இயக்குநரைச் சந்தித்து சார். இந்த புத்தகக் கண்காட்சி நல்லா இருந்துச்சு. அடுத்த வருசமும் நடத்தச் சொல்லுங்க என்று உரிமையோடு கோரிக்கை வைத்தார்கள்.

இன்னக்கி நிறைய பெண்கள் வந்திருந்தாங்க. நிறைய பேர் கிராமங்கள்ல இருந்து வந்திருந்தாங்க. துண்டுச் சீட்டில் புத்தகங்களோட பேர் எழுதி வச்சிட்டு ஒவ்வொரு ஸ்டாலா போய் அவங்க புத்தகங்கள் வாங்குனதைப் பார்க்க கோடிக் கண்கள் வேணும் என்று புத்தக விற்பனையாளர் சொன்னது மிகையல்ல; ஆம். கோடிக் கண்கள் வேண்டும்.

கட்டாயப்படுத்தி அழைத்து வருவதற்கும் ஆர்வத்தோடு வருவதற்குமான நூலிழை வேறுபாடு இதுதானே.

# வணிகம் வளர்க...
# மகளிர் சுய உதவிக் குழுக்களின் தரமான தயாரிப்புப் பொருட்கள்

தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் மகளிர் சுய உதவிக் குழுக்களின் உறுப்பினர்கள், தரமான பொருட்கள் பலவற்றை தயாரித்து விற்பனை செய்து வருகின்றனர். சுய உதவிக் குழுக்களின் தயாரிப்பு பொருட்களை அனைவரும் அறிந்து கொள்ளவும், அவற்றிற்கான சந்தை வாய்ப்புகளை அதிகரித்திடவும் மாதந்தோறும் முற்றம் இதழில் சுய உதவிக் குழுக்களின் தயாரிப்புப் பொருட்கள் குறித்த விபரங்கள் வெளியிடப்பட உள்ளன.

**அரியலூர் மாவட்டம்**

| சுய உதவிக்குழுவின் பெயர் | தயாரிப்புப் பொருளின் பெயர் | விலை | |
|---|---|---|---|
| திருமதி. உமா மகேஸ்வரி,<br>ஈஸ்வரி மகளிர் சுய உதவிக் குழு,<br>ஆண்டிமடம் ஊராட்சி,<br>அரியலூர் மாவட்டம்.<br>கைபேசி – 78268 49788 | முந்திரிப் பருப்பு | ரூ. 800/– முதல் (1 கிலோ) |  |
| திருமதி. செல்வி,<br>சிவகாமி மகளிர் சுய உதவிக் குழு,<br>திருக்காளப்பூர் ஊராட்சி,<br>ஆண்டிமடம், அரியலூர் மாவட்டம்.<br>கைபேசி – 78689 91055 | சிறுதானியங்கள் | ரூ. 60/–முதல் (1 கிலோ) |  |
| திருமதி. ராதிகா,<br>ஸ்ரீ மதுரை காளியம்மன் மகளிர் சுய உதவிக் குழு,<br>வாலாஜாநகரம் ஊராட்சி,<br>அரியலூர் மாவட்டம்.<br>கைபேசி – 80122 63519 | கிரிஸ்டல் மணிமாலைகள் | ரூ. 150/– முதல் (1 மாலை) |  |
| திருமதி. மாதவி,<br>அய்யனார் மகளிர் சுய உதவிக் குழு,<br>சுண்டக்குடி ஊராட்சி,<br>அரியலூர் மாவட்டம்.<br>கைபேசி – 96559 26400 | சணல் பைகள் | ரூ. 80/– முதல் (1 பை) |  |
| திருமதி. கலைச் செல்வி,<br>அமுதசுரபி மகளிர் சுய உதவிக் குழு,<br>மஞ்சமேடு ஊராட்சி,<br>திருமானூர், அரியலூர் மாவட்டம்.<br>கைபேசி – 90034 47430 | பட்டு மற்றும் பருத்திபுடவைகள் | ரூ. 3700/– முதல் (1 புடவை) |  |









# பீனிக்ஸ் நாற்றங்கால் பண்ணை சிறப்புக் குழுவின் ஒருங்கிணைந்த நாற்றங்கால் பண்ணை

திருவள்ளூர் மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு மற்றும் கட்டுப்பாடு அலகு மூலமாக எச்.ஐ.வி. நோயால் பாதிக்கப்பட்டவர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வகையில் ஒருங்கிணைந்த நாற்றங்கால் பண்ணை அமைப்பதற்கு திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் அனுமதி அளிக்கப்பட்டது. அதன் அடிப்படையில், எச்.ஐ.வி. தொற்றுடன் வாழும் மகளிரை திருவள்ளூர் மாவட்ட தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் மூலமாக ஒருங்கிணைத்து பீனிக்ஸ் நாற்றங்கால் பண்ணை சிறப்புக் குழு என்ற பெயரில் சிறப்பு குழுவினை திருவள்ளூர் மாவட்டம், கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் உருவாக்கி, அக்குழுவின் பெயரில் இந்தியன் வங்கி, கடம்பத்தூர் கிளையில் 23.05.2022 அன்று வங்கிக் கணக்கு துவக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, தொடர்ந்து பீனிக்ஸ் நாற்றங்கால் பண்ணை சிறப்புக் குழுவிற்கு திருவள்ளூர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்திலிருந்து 20.10.2022 அன்று திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் விருப்ப நிதி (CSR) நிதியாக வழங்கப்பட்ட ரூ. 20 இலட்சம் மதிப்பீட்டில் கடம்பத்தூர் வட்டாரத்தில் 10 உறுப்பினர்களை இணைத்து நாற்றங்கால் பண்ணை அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களுக்கு K.V.K., திருவூர் மற்றும் INDSETI, திருவள்ளூர் மூலமாக நாற்றங்கால் பண்ணை அமைப்பதற்கான ஒரு நாள் பயிற்சியும் வழங்கப்பட்டது.

இதனை தொடர்ந்து உலக எய்ட்ஸ் தினமான 01.12.2022 அன்று கடம்பத்தூர் ஊராட்சி ஒன்றிய வளாகத்தில். திருவள்ளூர் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர். ஆல்பி ஜான் வர்கீஸ், இ.ஆ.ப., அவர்கள் பீனிக்ஸ் நாற்றங்கால் பண்ணையை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி), மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் திட்ட இயக்குநர், துணை இயக்குநர் (சுகாதார பணிகள்), வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மற்றும் சிறப்பு மகளிர் குழுவின் உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்பண்ணையில் பல்வேறு வகையான நாற்றங்கால்களுடன், அசோலா மற்றும் பஞ்சகாவ்யா நுண்ணுயிர் உரம் போன்றவற்றையும் உற்பத்தி செய்து விற்பனை செய்வ தால் பீனிக்ஸ் நாற்றங்கால் பண்ணை சிறப்புக் குழு உறுப்பினர்களின் வாழ்வாதாரம் உயர்வடைந்து வருகிறது.

# வளர்ச்சிநிதி கடன் பெற்று வாழ்வாதார வளம்பெற்ற முதியோர் சுய உதவிக்குழு உறுப்பினர்



என் பெயர் ரா.சாரதாபாய் (க/பெ.ஸ்ரீராமுலு). விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை வட்டாரம், செட்டிக்குறிச்சி ஊராட்சியில் வசித்து வரும் நான், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் செட்டிக் குறிச்சி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பு மூலம் தாழம்பூ முதியோர் சுய உதவிக்குழுவில் உறுப்பினராக உள்ளேன். வீட்டிலேயே மசால்பொடிகள், ஊறுகாய்கள், ஊதுபத்தி, சாம்பிராணி மற்றும் ரஸ்னா போன்றவற்றை தயாரிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகிறேன். இதனை மேலும் விரிவுபடுத்த விரும்பி எங்கள் பகுதியில் செயல்படும் கிராம வறுமை ஒழிப்புச் சங்கத்தின் மூலம் வளர்ச்சி நிதியிலிருந்து தனிநபர் கடனாக ரூ.20,000/– பெற்று, அந்தத் தொகையைக் கொண்டு, எனது தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை வாங்கி அதிக அளவில் பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். மேலும் திட்டத்தின் வழிகாட்டுதலில் FSSAI தரச்சான்றும் பெற்றுள்ளேன். தற்போது எனது தொழில் மூலம் கிடைக்கும் வருவாயினால் பொருளாதார வளர்ச்சி பெற்று எனது வாழ்வாதாரத்தை மேம்படுத்தியுள்ளேன். மேலும் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் ஆலோசனைகளை பெற்று எனது தொழிலை விரிவுபடுத்தி வருகிறேன். எனது வாழ்வாதாரத்திற்கு வழிகாட்டிய ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு எனது குடும்பத்தின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# செங்கல் காளவாய் தொழில் செய்து வரும் அம்மன் மகளிர் சுய உதவிக்குழுவின் வெற்றிக்கதை

புதுக்கோட்டை மாவட்டம், ஆ.குளவாய்பட்டி ஊராட்சியில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் செயல்பட்டு வரும் குளவாய்பட்டி ஊராட்சி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள 33 மகளிர் சுய உதவிக்குழுக்கள் அனைத்தும் முறையாக செயல்பட்டு வருகின்றன.



இந்தக்கூட்டமைப்பில் 2014 ஆம் ஆண்டு முதல் இணைந்து செயல் பட்டுவரும் அம்மன் மகளிர் சுய உதவிக்குழுவில் 15 உறுப்பினர்கள் உள்ளனர். இக்கூட்டமைப்பில் உறுப்பினராக உள்ள குழுக்களின் உறுப்பினர்கள் செங்கல் காளவாய் தொழில் செய்து வருகின்றனர். இத் தொழில் மூலம் உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஒரு நாளைக்கு 300/–ரூபாய் வரை வருமானம் ஈட்டி வருகின்றனர். இதன் மூலம் இவர்களின் வாழ்வாதாரம் உயர்ந்து வருகின்றது. இக்குழுவிற்கு சுழல் நிதியாக ரூ.60,000/– வங்கி மூலம் வழங்கப்பட்டுள்ளது. வங்கியில் பெருங்கடனாக ரூ.1,00,000/– பெற்றுதங்களின் தொழிலை மேம்படுத்தி உள்ளனர்.

தொடர்ந்து ,தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் ரூ. 3,00,000/– தொழில் கடன் பெற்று தொழிலை வலுப்படுத்தி உள்ளனர். குழுவின் உறுப்பினர்கள் தாங்கள் வாங்கிய வங்கிக் கடனை முறையாக செலுத்துவதனால் இவர்களுக்கு வங்கிகள் தொடர்ந்து கடனுதவி செய்கின்றனர். இவர்களுக்கு கிடைக்கும் வருமானம் இவர்களின் குடும்ப வாழ்வாதாரத்திற்கும், பிள்ளைகளின் படிப்பு செலவிற்கும் மிகவும் பயனளிக்கிறது. தங்களுக்கு உதவிகள் செய்த தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்திற்கு அம்மன் மகளிர் சுய உதவிக்குழுவின் உறுப்பினர்கள் அனைவரும் தங்களின் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றனர்.

# சிரங்காட்டுப்பட்டியின் சிங்கப் பெண் மாலதி



திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஊராட்சி ஒன்றியம், சிரங்காட்டுப்பட்டி ஊராட்சியில் சிங்கப் பெண்ணாக வாழ்ந்துவரும் திருமதி. மாலதி என்பவரின் கதை இது.

மிகவும் எளிய குடும்பத்தில் பிறந்த பெண் மாலதி. இவரின் தாத்தா 1977ஆம் ஆண்டில் கலப்பு திருமணம் செய்த காரணத்தால் அவரின் குடும்பத்துடன் சேர்ந்த 28 குடும்பங்களையும் ஊரார் ஒதுக்கி வைத்தனர். எந்தவொரு சுபகாரியங்களுக்கும் அழைப்பதில்லை. கோவிலில் அர்ச்சனைக்கு அனுமதிப்பதில்லை. வரி வசூலிப்பதில்லை போன்ற அடிப்படை அங்கீகாரங்கள் எதுவும் வழங்காமல், கிராம முக்கிய ஸ்தர்கள் மாலதியின் தாத்தா மற்றும் அவரைச் சார்ந்த 28 குடும்பத்தினரையும் தீண்டத் தகாதவர்களாக கருதி ஒதுக்கி வைத்தார்கள்.

தான் ஒதுக்கப்பட்ட காரணத்தை தனது 15 வயதில் தன் தாயாரிடம் கேட்டு அறிந்த மாலதி, தீண்டாமை எனும் தீயை அணைக்க சபதம் பூண்டார். இந்தப் பிரச்சனையை காவல் துறையில் பணிபுரிந்தால் மட்டுமே சுலபமாக முடிவுக்கு கொண்டுவரலாம் என எண்ணி அதற்கான முயற்சியில் இறங்கினார். தான் ஒதுக்கப்பட்ட நிலையில் இருப்பதை அறிந்தும், தன்னை மணக்க விரும்பி ஒருவர் வந்த நிலையில் மாலதி 2013ஆம் ஆண்டில் காதல் திருமணம் செய்தார். எனவே காவல்துறை பணியில் சேர இயலவில்லை. இல்லற வாழ்வில் 2 பெண் மற்றும் 1 ஆண் குழந்தையும் பெற்றார்.

மாலதியின் மன தைரியத்துக்கு வலு சேர்க்கும் விதமாக 10.04.2018.ஆம் தேதி, அவர் வசிக்கும் பகுதியில் உள்ள மகளிரை ஒன்று சேர்த்து தமிழ்நாடு மாநில ஊரகவாழ்வாதார இயக்கத்தின் மூலமாக, ரோஜா மகளிர் குழுவினை உருவாக்கினார். வாழ்வாதார இயக்கத்தின் மூலம் பெற்ற பயிற்சி மற்றும் அனுபவத்தின் வாயிலாக மாலதி ஒரு சிங்கப் பெண்ணாக அவதார மெடுத்தார்.

தன்னால் சேர இயலாத காவல் துறையில் தன் மகனை சேர்த்து அழகு பார்க்க நினைத்த மாலதியின் எண்ணத்தில் மீண்டும் இடி விழுந்தது. 22.07.2021 அன்று நடந்த சாலை விபத்தில் பிறந்து ஏழு மாதமே ஆன தன் மகனை இழந்தார். படுகாயத்துடன் மதுரை அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மாலதி பிழைக்க வழியில்லை என வெளியேற்றப்பட்டார். ஆனால் அவர் உறுதியாக பிழைப்பேன், என் குடும்ப உறுப்பினர்களை ஊருடன் ஒன்று சேர்ப்பேன் என்ற வைராக்கியத்துடனும், மனதை ரியத்தோடும் இருந்ததால் மறுபிறப் பெடுத்தார் மாலதி.

ஊரைவிட்டு ஒதுக்கப்பட்ட அனைத்து குடும்பங்களையும் 2019ஆம் ஆண்டில் ஒன்று திரட்டி நத்தம் காவல் நிலையத்தில் தீண்டாமை குறித்து புகார் மனு அளித்தார். அதிகாரிகள் எவ்வளவோ எடுத்து கூறியும் ஊர் மக்கள் கேட்கவில்லை, மாலதியும் அடங்க வில்லை. 36 முறைபடையெடுத்தார். இறுதியாக மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக் குழு வழக்கறிஞர் ஒரு வருடன் மாவட்ட ஆட்சித்தலைவரை சந்தித்தார். பெண்ணின் மனதை பெண்ணே அறிவார் என்ற வாக்கிற்கு ஏற்ப திண்டுக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. விஜயலெட்சுமி, இ.ஆ.ப., அவர்களின் அதிரடி நடவடிக்கைக்கு ஊர் மக்கள் பணிந்தனர். கிராம முக்கிய ஸ்தர்கள் மாலதியின் வாதங்களுக்கு கட்டுப்பட்டனர். 44ஆம் ஆண்டு காலமாக எரிந்த தீண்டாமை எனும் தீ 2021ஆம் ஆண்டு மாலதி என்ற தனிநபரின் முயற்சியால் அணைந்தது கோவிலில் அர்ச்சனைக்கு அனுமதிக்கப்பட்டார்கள். வரிவசூலிக்கப்பட்டது.

மன உறுதி குறையாத சிங்கப்பெண் மாலதிதான் பெற்ற இரண்டு பெண் குழந்தைகளையும் தன்னைப் போல தைரியமாக வளர்த்து காவல் துறை அதிகாரிகளாக்கி தனது கனவை நனவாக்க வைராக்கியமாக வாழ்ந்து வருகிறார். தன் குடும்பம் அல்லாது தன் கிராமமக்களையும் முன்னேற்ற துடித்தார் மாலதி. இவரின் சேவை மனப்பான்மையை அறிந்து, தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கத்தின் சமுதாய சுய உதவிக்குழு பயிற்றுநராக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

வாருங்கள் மாலதியின் கனவு நனவாக நாமும் வாழ்த்துவோம்!

# ஆரோக்கியம் நிறைந்த மசாலா இட்லி



குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவருக்கும் ஏற்ற ஒரு நல்ல உணவுவாக இருப்பது இட்லி. இதுவரையில் நாம் வெறும் இட்லி மட்டும் சாப்பிட்டிருப்போம். இப்போது இந்த இட்லியில் கொஞ்சம் காயும் சேர்த்து சாப்பிடும் போது அது இன்னும் ஆரோக்கியம் தானே. அதிலும் மாவு அரைத்து கஷ்டப்படாமல் இன்ஸ்டன்டாக உடனே இப்படி ஒரு ஆரோக்கியமான உணவு கிடைத்தல் நல்லது தானே அப்படி ஒரு இட்லி ரெசிபியை தான் இப்போது தெரிந்து கொள்ளப் போகிறோம்.

இந்த இட்லி செய்வதற்கு முதலில் மாவை தயார் செய்து கொள்வோம். மாவு என்றவுடன் அரிசி, உளுந்து ஊற வைத்து அரைக்க வேண்டியது என்று நினைத்து விட வேண்டாம் இது இன்ஸ்டன்ட் மாவு தான். இதற்கு ஒரு கப் ரவை எடுத்துக் கொள்ளுங்கள் எந்த கப்பில் ரவை அளக்கிறீர்களோ அதே கப்பில் ஒரு கப் அளவிற்கு தயிர், அதே கப்பில் ஒரு கப் அளவிற்கு தண்ணீர் மூன்றையும் ஒன்றாக கலந்து கால் டீஸ்பூன் உப்பு சேர்த்த பிறகு பத்து நிமிடம் மூடி வைத்து விடுங்கள் அவ்வளவு தான் 10 நிமிடம் கழித்து இதில் கொஞ்சம் ஈனோ சேர்த்து அடித்து எடுத்து வைத்துக் கொண்டால் இந்த இட்லிக்கான மாவு தயார்.

இப்பொழுது இந்த இட்லிக்கு உள்ளே வைக்கும் மசாலாவை தயார் செய்து விடுவோம். இரண்டு உருளைக்கிழங்கை வேக வைத்து எடுத்து மசித்து கொள்ளுங்கள். அதில் ஒரு வெங்காயத்தை பொடியாக நறுக்கி சேர்த்துக் கொள்ளுங்கள். இதே போல் ஒரு பச்சை மிளகாய், கொஞ்சம் கருவேப்பிலை, கொத்தமல்லி என அனைத்தையும் நல்ல பொடியாக நறுக்கி சேர்த்து கொள்ளுங்கள்.

அத்துடன் அரை டீஸ்பூன் அளவிற்கு மிளகாய்த்தூள், கால் டீஸ்பூன் மஞ்சள் தூள், கால் டீஸ்பூன் உப்பு என இவை அனைத்தையும் சேர்த்த பிறகு அரை டீஸ்பூன் லெமன் ஜூஸ் சேர்ந்து இந்த மசாலாவை நன்றாக கலந்து சிறு சிறு உருண்டைகளாக செய்து எடுத்து வைத்துக் கொள்ளுங்கள். இப்போது இட்லிக்கு உள்ளே வைக்கும் மசாலாவும் தயாராகி விட்டது.

உங்களுக்கு தேவைப்பட்டால் உருளைக்கிழங்கோடு கேரட், பீன்ஸ் போன்ற காய்கறிகளை சின்ன சின்னதாக நறுக்கியும் சேர்த்துக் கொள்ளலாம். இப்போது பத்து நிமிடம் கழித்து தயாராக இருக்கும் மாவை ஒரு முறை நன்றாக அடித்து எடுத்துக் கொள்ளுங்கள். இட்லி பாத்திரத்தில் தண்ணீர் ஊற்றி இட்லி தட்டு வைத்து தண்ணீரை கொதிக்க விடுங்கள். இப்போது நான்கு ஒரே அளவு உள்ள சின்ன கிண்ணங்கள் அல்லது டம்ளர் எடுத்துக் கொள்ளுங்கள். இப்பொழுது இந்த டம்ளரில் முதலில் லேசாக எண்ணெய் தடவி கொள்ளுங்கள். அதன் பிறகு, கரைத்து வைத்திருக்கும் மாவில் ஒரு கரண்டி மாவை ஊற்றிய பிறகு நீங்கள் உருட்டி வைத்திருக்கும் மசாலாவை வைத்து மேலும் ஒரு கரண்டி மாவை ஊற்றுங்கள். இதே முறையில் இட்லி தட்டில் கூட ஊற்றலாம்.

நீங்கள் கிண்ணங்களில் ஊற்றினாலும் சரி டம்ளர்களில் ஊற்றி வைத்தாலும் சரி, அதன் முக்கால் பாகம் வரை மாவு இருக்கும் படி பார்த்துக் கொள்ளுங்கள். அவ்வளவு தான் இதை அப்படியே எடுத்து இட்லி பாத்திரத்தில் வைத்து வேக வைத்து எடுத்து விடுங்கள். வெந்த பிறகு சூடு ஆறியவுடன் எடுத்து ஒரு தட்டில் கவுத்து தட்டினால் போதும். இட்லி அருமையாக ரெடி ஆகிவிடும். இதற்கு தனியாக சைட் டிஷ் எதுவும் தேவையில்லை இதில் உள்ளிருக்கும் மசாலாவே போதும். காலை பள்ளிக்குச் செல்லும் குழந்தைகள் முதல் வீட்டில் இருக்கும் பெரியவர்கள் வரை அனைவருக்கும் ஏற்ற நல்ல ஒரு ஆரோக்கியமான உணவு தான் இது சேர்க்கும் காய்கள் மட்டும் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப சேர்த்துக் கொள்ளுங்கள்.

### பயனுள்ள சிறு குறிப்புகள்

- தேங்காய் தண்ணீரை வீணாக்காமல் ரசத்தில் சேர்த்தால் ரசம் மிகவும் ருசியாக இருக்கும்.
- எந்த கறை ஆடையில் பட்டாலும் சிறிது வினிகர் போட்டு துவைத்தால் கறை இருந்த இடம் தெரியாது.
- மண்பாத்திரம்புதிதாகவாங்கினால்அதில்சிறிதுஎண்ணெய் தடவி அடுப்பில் சற்று நேரம் சூடேற்றி பின் கழுவினால் மண்வாசனையும் வராது விரிசலும் விடாது.
- வாஷ் பேசினில் இரண்டு அல்லது மூன்று ரசகற்பூரம் போட்டு வைத்தால் எந்தவித துர்நாற்றமும் வராது.
- பழைய டூத்பிரஷ்களை தூக்கி எறிந்து விடாதீர்கள். மரக்கதவு, கிரீல் கேட் போன்றவற்றின் இடுக்குகளில் உள்ள தூசிகளை அகற்ற பயன்படுத்தலாம்.
- ஊதுவத்தி பாக்கெட்டுகள் காலியானதும் அவற்றை துணிவைக்கும் பீரோவில் போட்டுவைத்தால் பீரோவை திறக்கும் போது கமகமக்கும்.
- தரையில் எண்ணெய் கொட்டி விட்டால் அதன்மிதும் கோலப்பொடியை தூவிவிட்டு துடைத்தால் எண்ணெய் பசை நீங்கி விடும்.

# வளமான வாழ்விற்கு வழிகாட்டிய இயக்கம்



என் பெயர் கட்டித்தங்கம் (வயது 50). நான் விருதுநகர் மாவட்டம் சாத்தூர் நகராட்சியின் குடிசைபகுதியான கான்வென்ட் தெற்குத் தெரு பகுதியில் வசித்து வருகிறேன். சுமார் 15 வருடம் முன்பு வரை நான் மிக சாதாரண கூலித் தொழிலாளியாக ஏராளமான கனவுகளுடன் வசித்து வந்தேன். என் கணவர் சிறிய பெட்டிக்கடை வைத்திருந்தார். அதில் வரும் வருமானம் போதுமானதாக இல்லாததால் அவசர தேவைக்கு அருகில் உள்ள நிதி நிறுவனத்தில் கடன் பெற்று, அக்கடனை தி ரும்ப செலுத்த முடியாமல் பல வருடங்களாக கடனாளியாக இருந்து வந்தேன். இந்நிலையில் எங்கள் பகுதியில் புதிதாக துவங்கப்பட்டு செயல்பட்டு வந்த மகளிர் குழுக்களின் செயல்பாடுகள் பற்றி கேள்விப்பட்டு அவற்றை முழுமையாக அறிந்து என் குடியிருப்பு பகுதியில் என்னை போல் உள்ள ஏழை மகளிரை உறுப்பினராக சேர்த்து 'தமிழ் மங்கை என்ற பெயரில் புதிய சுய உதவிக்குழுவை துவங்கினேன்.

குழுவில் இணைந்ததன் மூலம் குழு உறுப்பினர்களுக்கான பல்வேறு மேம்பாட்டு விழிப்புணர்வு கூட்டங்களில் கலந்து கொண்டேன். குறிப்பாக ஒருமுறை LIC பற்றி நடைபெற்ற (முகவர்) விழிப்புணர்வு கூட்டத்தில் கலந்து கொண்டு, சமுதாய அமைப்பாளரின் வழிகாட்டுதலுடன் LIC முகவராகி கடந்த 8 வருடங்களாக சிறந்த முகவராக செயல்பட்டு வருகிறேன். முகவர் பணி மூலம் எனக்கு மாதவருமானமாகம் சராசரியாக ரூ.10000/– வரை பெற்று வருகிறேன்.

குழு உறுப்பினர்கள் மற்றும் என் பகுதியில் வசிப்பவகள் அனைவருக்கும் காப்பீட்டு திட்டத்தில் சேருவதனால் ஏற்படும் நன்மைகள் பற்றி எடுத்துரைத்து, தேவைகளுக்கு ஏற்றாற் போல் அனைத்து வகையான காப்பீட்டு திட்டங்களிலும் பயனடைய வழிகாட்டி வருகிறேன். வெளிநபர்களிடம் அதிகம ான வட்டிகளுக்கு கடன் வாங்கி, அக்கடனைத் திரும்ப செலுத்த முடியாமல் இருக்கும் என்னை போன்ற அனைத்து மகளிரும் குழுவில் சேர்வதினால் கிடைக்கும் நன்மைகளை எடுத்துக் கூறிவருகிறேன். எனது குடும்பத்தின் பொருளாதாரம் மேம்பாடு அடைந்ததற்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# PMFME கடனுதவியால் கிடைத்த பொருளாதார வளர்ச்சி



என் பெயர் லலிதா, நான் விழுப்புரம் மாவட்டம், அரகண்ட நல்லூர் பேரூராட்சியின் வடக்கு வீதியில் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் வீர தமிழச்சி மகளிர் சுய உதவிக் குழுவில் உறுப்பினராக உள்ளேன்.

நான் சுய தொழிலாக சேமியாவினை மொத்தமாக வாங்கி 1 கிலோ மற்றும் 1/2 கிலோ என எடைபோட்டு அவைகளை நான் வசிக்கம் பகுதியில் விற்பனை செய்து வந்தேன். அதன் மூலம் எனக்கு மாதம் ரூ.9000/– வரை வருமானம் கிடைத்து வருகிறது.

தற்போது எனது தொழிலை விரிவுபடுத்துவதற்காக நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் வழிகாட்டுதலில் எங்கள் பகுதியில் செயல்பட்டு வரும் பகுதி அளவிலான கூட்டமைப்பில் நான் உறுப்பினராக உள்ள வீரதமிழச்சி மகளிர் சுய உதவிக் குழுவினை இணைத்தோம். அந்த பகுதி அளவிலான கூட்டமைப்பில் உணவு பொருட்கள் தயாரிக்கும் தொழில் செய்பவர்களுக்காக PMFME– யில் 1/2 சதவீதம் வட்டியில் ரூ.40,000/– கடனாக வழங்கப்பட்டது.

எனக்கு வழங்கப்பட்ட இந்தக் கடன் தொகையினைக் கொண்டு எனது தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களை வாங்கி, அதிக அளவில் பொருட்களை தயாரித்து விற்பனை செய்து வருகிறேன். எனக்கு கடனுதவி பெற்றுத்தந்த தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





# ஆக்கமும் ஊக்கமும் கொடுத்த சுழல்நிதி

தேனி மாவட்டம், தேவதானப்பட்டி பேரூராட்சியில் உள்ள குள்ளக்காபட்டி குடியிருப்பில் முத்தாலம்மன் மகளிர் சுய உதவிக்குழு 24.02.2020 முதல் செயல்பட்டு வருகிறது. இக்குழுவின் வெற்றிகரமான செயல்பாடு குறித்து அக்குழுவின் உறுப்பினர்கள் சொல்வதைக் கேட்போம் வாருங்கள். எங்கள் குழுவில் உறுப்பினர்களாக உள்ள 15 பெண்களும் மாதம் ஒன்றுக்கு ரூ.200/– வீதம் சேமிப்பு செய்து வருகிறோம். குழுவில் உள்ள அனைவரும் ஒன்றாக இணைந்து மண்பானை தயாரிக்கும் தொழில் செய்து வருகிறோம். துவக்கத்தில் நாங்கள் மரத்திலான சக்கரத்தை கையில் சுற்றி மண்பானைகள் உற்பத்தி செய்தோம்.

எங்கள் குழுவிற்கு 3 மாதம் முடிவடைந்த நிலையில் நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தில் இருந்து சுழல் நிதியாக ரூ.10,000/– வரப்பெற்றது. இந்த 3 மாதகால அளவில் சேமிப்பு தொகை ரூ.9,000/– வங்கியில் இருந்தது. நாங்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து மின்மோட்டார் இயங்கும் சக்கரம் வாங்க தீர்மானித்தோம். மானிய விலையில் தலா ரூ.5,000/– வீதம் ரூ.15,000/– மதிப்பீட்டில் 3 மின்மோட்டார்கள் வாங்கினோம். அதனை பயன்படுத்தி எங்களால் தற்போது அதிக அளவில் மண்பானைகள் உற்பத்தி செய்ய முடிவடைகிறது.

மேலும், 6 மாதம் முடிவடைந்த நிலையில் வங்கி கடன் ரூ.1,50,000/– பெற்று மண் அரவை இயந்திரம் வாங்கினோம். இவ்விரண்டு இயந்திரங்களின் வருகைக்கு பின்னர் எங்களின் உற்பத்தி திறன் 3 மடங்கு அதிகரித்தது. எங்களுக்கு மாத வருமானமாக ரூ.5,000/– வரை கிடைக்கிறது. மேலும் புதுவகை சாமி சிற்பங்கள் செய்வதற்கும் ஊக்கம் பிறந்துள்ளது. எங்களால் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை அருகில் உள்ள வாரச்சந்தையில் விற்பனை செய்து வருகிறோம். எங்களுக்கு ஊக்கமும், கடனுதவியும் அளித்து, வாழ்விற்கு வழிகாட்டிய தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்திற்கு எங்கள் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்து கொள்கிறோம் என்று மகிழ்ச்சியுடன் கூறுகின்றனர்.

# பெண் தன்னார்வலரின் வெற்றிப்பயணம்



மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பெண் சுகாதார தன்னார்வலராக பணிபுரிந்து வரும் என் பெயர் பிரகதாம்பாள். ஏழ்மையான குடும்பத்தில் பிறந்த நான், திருமணத்திற்கு பின் ஒரு ஆண் குழந்தை பிறந்த நிலையில், எனது கணவர் என்னை பிரிந்து சென்றதால், கைவிடப்பட்ட நிலையில் எனது மகனுடன் கூலி வேலை செய்து பிழைத்து வந்தேன். நிரந்தரமான வேலை இல்லாததால் மிகவும் சிரமப்பட்டேன். பின்னர் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் கீழ் செயல்படும் புதுமை மகளிர் சுய உதவிக்குழுவில் உறுப்பினராக சேர்ந்தேன்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் நகர்ப்புர பகுதிகளில் மக்களை தேடி மருத்துவம் பணிக்கு பணியாளர்கள் தேர்வு செய்யப்படுவது தெரிந்து நானும் என்னுடைய விண்ணப்பத்தை மாவட்ட அலுவலகத்தில் சமர்ப்பித்தேன். மகளிர் சுய உதவிக்குழுவில் சிறப்பாக செயல்பட்ட எனது அனுபவத்தின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டேன். பின் மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் பணிபுரிவதற்கு புதுக்கோட்டை மாவட்ட சுகாதார அலுவலகத்தில் 15 நாட்கள் பயிற்சி பெற்றேன். அதன் பின்னர் புதுக்கோட்டை நகராட்சி பகுதியில் கோவில்பட்டி ஆரம்ப சுகாதார மையத்தின் கீழ் 37 முதல் 42 ஆகிய வார்டுகளில் பயனாளிகளை ஆய்வு செய்யும் மருத்துவ பணி எனக்கு வழங்கப்பட்டது. நாள் ஒன்றுக்கு குறைந்தது 25 வீடுகளுக்கு நேரில் சென்று பார்வையிட்டு அறிக்கை சமர்ப்பிக்க தெரிவிக்கப்பட்டது. மேலும் மாதந்தோறும் நான் மேற்கொள்ளும் பணிகளின் அடிப்படையில் ஜான்சிராணி பகுதி அளவிலான கூட்டமைப்பு மூலம் ஊக்கத்தொகை பெற்று வருகிறேன்.

தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கம் திட்டத்தின் கீழ் ஏழை எளிய மக்களை நாடி சென்று அவர்களுக்கு தேவையான உதவிகளை செய்து தன்னம்பிக்கையுடனும் பணிபுரிந்து வருகிறேன். வரும் காலங்களில் இன்னும் அதிக அளவிலான மக்கள் என்னால் பயனடையும் விதமாக உழைப்பேன் என உறுதியளிக்கிறேன்.

# சேமிப்பால் கிடைத்த வெற்றி



என் பெயர் சத்யா, 10 வகுப்பு வரை படித்துள்ள நான் சேலம் மாவட்டம், அயோத்தியா பட்டணம் பேரூராட்சியில், ஊராட்சி ஒன்றிய துவக்கப்பள்ளி அருகில் வசித்து வருகின்றேன். கலப்பு திருமணம் செய்து கொண்டதால் குடும்பத்தாரால் தள்ளி வைக்கப்பட்டேன். எனக்கு 1 ஆண் மற்றும் 1 பெண் என இரண்டு குழந்தைகள் உள்ளனர். எனது கணவர் ஒரு தனியார் நிறு வனத்தில் பணிபுரிந்து வருகிறார். எங்களது குடும்ப வருமானம் மிகக் குறைந்த நிலையில், தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்தின் மூலம் செயல்பட்டு வரும் வைத்தீஸ்வரன் மகளிர் சுய உதவிக் குழுவில் இணைந்தேன்.

குழுவில் உள்ள 12 உறுப்பினர்கள் ஒன்றுசேர்ந்து சேலம் இந்தியன் வங்கி மைக்ராசேட் கிளையில் வங்கிக்கணக்கு துவங்கி மாதந்தோறும் ரூ.200/– வீதம் சேமித்து வந்தோம். வங்கிக் கடன் மூலம் ரூ.15,000/– பெற்று ஒரு தையல் இயந்திரம் வாங்கி, தையல் கற்று கிடைத்த வருமானத்தைக் கொண்டு நான் பெற்ற குழுவின் வங்கிக் கடனை திருப்பி செலுத்திவிட்டேன்.

பின்னர் நான் குழுவின் பிரதிநிதியாக பொறுப்பேற்று இரண்டாவதாக வங்கிக் கடனாக ரூ.40,000/– பெற்று அதன் மூலம் தையலுக்கு தேவையான துணிகளை வாங்கி தைத்துக் கொடுத்து, அதன் மூலம் கிடைத்த வருமானத்தைக் கொண்டு பெற்ற கடனை திருப்பி செலுத்தினேன். பிரதமரின் வீடுகட்டும் திட்டத்தின் மூலம் எங்களுக்கு வீடு கட்ட ரூ.2,10,000/– மானியம் கிடைத்தது. அதனைக் கொண்டு வீடு கட்டினேன். பின்னர், 4 வது வங்கி இணைப்பு கடன் மூலம் ரூ.2,30,000/– கொண்டு வீடு கட்டுவதற்கு வெளியில் வாங்கிய கடனை திருப்பி செலுத்தினேன்.

மேலும், குத்தகைக்கு பயிர் செய்ய இடம் வாங்கி அதில் மக்காச்சோளம் விளைவித்து வருவதுடன், பசுமாடு வாங்கி பால் வியாபாரமும் செய்து வருகின்றேன். இரண்டிலும் வரும் வருமானத்தைக் கொண்டு மகளிர் சுய உதவிக் குழுவில் நான் பெற்ற வங்கிக் கடனை நன் முறையில் திருப்பி செலுத்தி வருகின்றேன். தற்போதைய எனது மாத வருமானம் ரூ.20,000/– ஆகும்.

மேலும், எங்கள் வைத்தீஸ்வரன் குழுவிற்கு ரூ.10,500/– வரை வட்டி மானியம் பெற்றுள்ளோம். இதன் மூலம் எங்களது குழுவில் உள்ளவர்களின் சேமிப்புத் தொகை உயர்ந்துள்ளது. மிகக் குறைவாக மாதம் ரூ.200/– சேமித்த எனது வாழ்க்கை உயர்ந்ததற்கு தமிழ்நாடு நகர்ப்புர வாழ்வாதார இயக்கத்திற்கு எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் எங்கள் வீட்டைச் சுற்றி 12 மகளிர் சுய உதவிக் குழுக்களை உருவாக்கியுள்ளேன் என்பதில் பெருமிதம் கொள்கிறேன்.



# நுகர்வோர் உரிமை தினம்

## டிசம்பர் 24



இந்த சட்டம், பொருட்களை தேர்வு செய்யும் முறை, அனைத்து வகையான அபாயகரமான பொருட்களிலிருந்தும் பாதுகாக்கப்படுவதற்கான உரிமை, அனைத்து வகையான பொருட்களின் தரம் மற்றும் செயல்பாடு பற்றி தெரிந்து கொள்வதற்கான உரிமை, நுகர்வோர் நலன்கள் தொடர்பான அனைத்து முடிவெடுக்கும் நடை முறைகளிலும் கேட்கப்படும் உரிமை, நுகர்வோர் உரிமைகள் மீறப்படும் போது அதற் குதீர்வு பெறுவதற்கான உரிமை, நுகர்வோர் கல்வியை நிறைவு செய்வதற்கான உரிமை என ஆறு வகையான உரிமைகளை நுகர்வோருக்கு வழங்குகிறது.

இந்த சட்டத்தின் கீழ் நுகர்வோர் பெறும் பொருட்கள் மற்றும் சேவைகளில் ஏதேனும் குறைபாடுகள், புகார்கள் இருந்தால் நுகர்வோர் குறைதீர் ஆணையம் மூலம் இழப்பீடு பெறமுடியும். பொருட்கள் என்றால் மொத்தமாக அல்லது சில்லறையாக கடைகளில் வாங்கப்படும் நிறைவு செய்யப்படும் பொருட்களின் ஏற்படும் குறைபாடு, சேவைகள் என்றால் போக்குவரத்து, மருத்துவம், வங்கி மற்றும் காப்பீடு சேவைகள் போன்று ஒரு தனி நபரிடமிருந்தோ அல்லது நிறுவனத்திடமிருந்தோ நுகர்வோர் கட்டணம் செலுத்தி பெறும் சேவைகளைக் குறிப்பது.

ஒரு குறை எழுந்து இரண்டு ஆண்டுகள் வரை புகார் பதிவு செய்யலாம். இரண்டு ஆண்டுகளைக் கடந்த புகார்கள் விசாரணைக்கு ஏற்றுக் கொள்ளப்படாது. நுகர்வோர் பாதுகாப்பு சட்டம் 2019-ன் கீழ் பதிவு செய்யப்பட்டு ஏற்றுக் கொள்ளப்படும் புகார்கள் 90 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும்.

புகார் பதிவு செய்வதற்கு முன் பாகபாதிக்கப்பட்டவர் எதிர் தரப்புக்கு தங்களுடைய குறைகளையும் அதற்கு அவர்கள் கோரும் தீர்வுகளையும் விவரித்து நோட்டீஸ் அனுப்ப வேண்டும். நுகர்வோர் ஆணையத்திற்கு செல்வதற்கு முன்பாக பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு பெறுவதற்கான முயற்சி இது. நோட்டீஸுக்கு பதில் வரவில்லை யென்றால் நுகர்வோர் சட்டத்தின் கீழ் உரிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் போதிய ஆதாரங்களுடன் புகார்பதிவு செய்யலாம்.

ரூ.1 கோடி வரை இழப்பீடு கோரும் புகார்களை மாவட்ட நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும். ரூ.1 கோடியிலிருந்து 10 கோடிவரை இழப்பீடு கோரும் புகார்களை மாநில நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும். ரூ.10 கோடிக்கும் மேல் இழப்பீடு கோரும் புகார்களை தேசிய நுகர்வோர் குறைதீர் ஆணையத்தில் பதிவு செய்ய வேண்டும்.

நுகர்வோர் இழப்பீடு பெறுவதற்கான வழிமுறைகள் தொடர்பாக மக்களிடையே போதிய விழிப்புணர்வு இருப்பதில்லை. எவ்வளவு சிறிய தொகையிலிருந்து பெரியதொகையாக இருந்தாலும் நுகர்வோர் இழப்பீடு பெற முடியும். உரியஆதாரங்களுடன் புகார் செய்தால் நிச்சயம் இழப்பீடு பெறமுடியும். புகார் செய்பவரே இதில் தனக்காக வாதாடவும் முடியும். ஆனால் மக்கள் இதற்காக பெரும்பாலும் மெனக் கெடுவதில்லை.

பல்வேறு சம்பவங்களில் நுகர்வோர் குறைகளுக்காக வாதாடி அதற்கு உரிய இழப்பீடும் பெற்றிருக்கிறார்கள். சமீபகாலங்களாக அதிகரித்துவரும் இணைய வழி வர்த்தகங்களால் நுகர்வோர் குறைகளும் அதிகரித்து வருகிறது. இதற்கும் நுகர்வோர் குறைதீர் ஆணையம் மூலம் தீர்வுகளைப் பெறமுடியும்.

தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களிலும் நுகர்வோர் குறைதீர் ஆணையம் செயல்பட்டுவருகிறது. மாநில குறைதீர் ஆணையமும் சென்னையிலும் அதன் கிளை மதுரையிலும் செயல்பட்டு வருகிறது.

மாவட்ட வாரியான நுகர்வோர் குறைதீர் ஆணையத்தின் முகவரியும் தொடர்பு எண்களையும் கீழ்கண்ட இணைய முகவரிகளில் பெறலாம்:

*http://www.scdrc.tn.gov.in/files/Address%20of%20District%20Consumer%20Forums%20in%20Tamilnadu.pdf*

*http://www.scdrc.tn.gov.in/files/email%20id%20of%20district%20forum.pdf*

# வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் ஊரகத் தொழில் நிறுவனங்களை மேம்படுத்த தொழில்சார் சமூக வல்லுநர்களுக்கு நிறுவன மேம்பாட்டுப் பயிற்சி

வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் மூலம் தொழில் சார் சமூக வல்லுநர்களுக்கான (ECPs), நிறுவன மேம்பாட்டுப் பயிற்சி முதல் கட்டமாக EDDI அணியின் மூலம் செங்கல்பட்டு, காஞ்சிபுரம், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, சேலம், மதுரை, நாமக்கல், திருநெல்வேலி, தென்காசி மற்றும் ஈரோடு ஆகிய 10 மாவட்ட அலுவலர்களுக்காக சென்னை, கிண்டியிலுள்ள சிட்கோ தொழிற்பேட்டை கட்டிடத்தில் 2022 நவம்பர் மாதம் 10 முதல் 12ஆம் தேதி வரை நடத்தப்பட்டது.

தொழில்சார் சமூக வல்லுநர்கள் (ECPs), ஊரகப் பகுதிகளிலுள்ள தொழில் நிறுவனங்களை வலுப்படுத்துவதற்காக, திட்ட செயல்பாடுகளை சிறப்பாக செயல்படுத்தவும், நிறுவன செயல்பாடுகளை சீராகப் புரிந்து கொள்ளவும், திட்டத்தின் இலக்குகளை முறையாக அடைய அவர்களை ஈடுபடுத்திக் கொள்ளவும் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சியின் மூலம் தொழில் சார் சமூக வல்லுநர்களுக்கு திட்டத்தின் முக்கியத்துவத்தை புரிய வைத்து, திட்டத்திற்காக சரியான பயனாளர்களைத் தேர்வு செய்து, அவர்களுக்கு பல்வேறு உதவிகள் வழங்கி, வெற்றிகரமான தொழில் நிறுவனங்களை உருவாக்குவதாகும்.

இப்பயிற்சி நாள் ஒன்றுக்கு 4 வகுப்புகளாக 3 நாட்கள் நடத்தப்பட்டது. முதல் நாளன்று வெற்றிகரமான தொழில் முனைவோர்மற்றும்வளநபரான,திருமதி.லு.நீ.பாக்கியலட்சுமி மற்றும் தலித் இந்திய வர்த்தக மற்றும் தொழில் சங்கத்தின் மூத்த துணைத் தலைவர் – தமிழ்நாடு பிரிவு ஆகியோர் பயிற்சி அமர்வைக் கையாண்டனர். இது ஒரு கலந்துரையாடும் அமர்வாக இருந்தது, இதில் ECP விரிவாக கலந்துரையாடி பங்கேற்றனர்.

தொழில் முனைவோர் குறித்த விவரங்கள், தொழில் முனைதல், தொழில் நிறுவனங்கள், தொழில் முனைவோரின் அடையாளம் மற்றும் திறன்கள், தொழில் முனைதலில் உள்ள நன்மைகள், தொழில் வடிவம் மற்றும் தொழில் வகைகள், தொழில் வடிவம் உருவாக்குவதன் முக்கியத்துவம், தொழில் வடிவம் உருவாக்குவதன் பயன்கள் குறித்து பயிற்றுவிக்கப்பட்டன.

இந்நிகழ்ச்சியின் முக்கியப் பகுதியாக வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் தலைமை செயல் அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்களும், முதன்மை செயலாக்க அலுவலர் திருமதி. எம்.அருணா, இ.ஆ.ப., அவர்களும் தொழில் நிறுவனங்களுக்கான கைப்பிரதியை வெளியிட்டனர்.

இதனைத் தொடர்ந்து தலைமை செயல் அலுவலர் திருமதி. ச.திவ்யதர்சினி, இ.ஆ.ப., அவர்கள், பங்கேற்பாளர்களை வரவேற்று உரையாற்றியதுடன், சமீபத்தில் உலக வங்கி அணியினர் செங்கல்பட்டு திட்ட நிறுவனங்களைப் பார்வையிட வந்தபோது அனைத்து ஏற்பாடுகளையும் சிறப்பாக செய்ததற்காக திட்டப் பணியாளர்களுக்கும், பயிற்சி பெற்று சிறப்பாக செயல் படவுள்ள தொழில்சார் சமூக வல்லுநர்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவித்தார். மேலும் கைப்பிரதியின் நன்மைகள் குறித்தும், பயிற்சிக்குப் பிந்தைய பயன்பாடுகள் குறித்தும் விவரித்தார்.

மேலும், ECP க்களுக்கு EDP பயிற்சி வழங்கப்படுவதைப் பாராட்டியதுடன், இந்தப் பயிற்சிகள் தொழில்சார் சமூக வல்லுநர்களுக்கு திட்ட செயல்பாட்டை சிறப்பாக செயல் படுத்தப் பயன்படுவது மட்டுமல்லாமல், எதிர்காலத்தில் தங்களது வாழ்வின் மேம்பாட்டுக்கும் முன்னேற்றத்திற்கும் இது உதவி புரியும் என்றதுடன், இந்தப் பயிற்சியின் மூலம் ECPக்களுக்கு வாழ்வாதார தொழில் வாய்ப்புகள் உருவாவதுடன், தொழில் திட்டம் தயாரித்தல், தொழில் நிறுவனம் பதிவிடுதல், உதவி புரிதல் போன்றவற்றில் உள்ள வாய்ப்புகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று குறிப்பிட்டதுடன், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திற்கு ஆதரவளித்த MSME–க்கு நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டார்.





# தலையாட்டி (எ) நடன பொம்மைகள் தயாரிக்கும் கலை கைவினைஞர் தொழிற்குழு

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி வட்டாரம், இடையூர் கிராம ஊராட்சியை சேர்ந்த 30 மகளிருக்கு தலையாட்டி (எ) நடன பொம்மைகளைத் தயாரிக்கும் பயிற்சி 2022 ஜூன் 8 ஆம் தேதி முதல் 15 நாட்கள், வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் சமுதாயத் திறன் பள்ளி (CSS) வழியாக வழங்கப்பட்டது. இப்பயிற்சியை பயிற்றுநர் திரு. இதயவாணன் வழங்கினார்.



இந்தப் பயிற்சியில், பொம்மைகளை உருவாக்க அச்சுக்களை பயன்படுத்த பயிற்சியாளர்கள் கற்றுக் கொண்டனர். இதில் முதன்மை பொம்மையாக குதிரை பொம்மை, நடன பொம்மைகள் (ஆண் மற்றும் பெண்) மற்றும் விநாயகர் பொம்மை ஆகியவை பிளாஸ்டர் ஆஃப் பாரிசில் எடை குறைவான வகையில் தயாரிக்கப்பட்டன, இவை இயற்கையிருந்து எடுக்கப்பட்ட நிறங்களில் வண்ணமிடப்பட்டன. இப்பயிற்சிக்குத் தேவையான மூலப்பொருட்களை பயிற்றுநர் கொண்டு வந்தார், இப்பயிற்சிக்காக VKP திட்டத்தின் மூலம் ரூ. 75,000 செலவிடப்பட்டது.

ஒரு மாதக்காலப்பயிற்சிக்குப்பிறகு, 15 மகளிரை குழுவாக இணைத்து 'கலை கைவினைஞர் தொழிற்குழு' என்ற பெயரில் தொழிற்குழு ஒன்றை தொடங்கினர். தொழிற்குழுவினர் தங்களுக்கு வரும் ஆர்டர்களின் அடிப்படையில் குழுவாக பொம்மைகளைத் தயாரித்து வருகின்றனர்.

கலை கைவினைஞர் தொழிற்குழுவின் உறுப்பினர்கள் தங்கள் கைவினைப் பொருட்களைத் தங்கள் வாட்ஸ்அப் ஸ்டேட்டசாகப் போட்டு, பல ஆர்டர்களைப் பெற்றுள்ளனர். குழுவினர் நவக்கிரக கோவிலுக்குத் தேவையான சில பொம்மைகளை தயாரித்து விற்பனை செய்துள்ளனர்.

சென்னை சாராஸ் நவராத்திரி மேளாவிலும் காட்சிப்படுத்தினர். பொம்மைகளின் விலை ரூ. 650/– முதல் ரூ. 850/– வரையிலான விலையில் விற்கப்பட்டன. ஜரிகை மற்றும் மணிகளைக் கொண்டு கூடுதல் பாகங்கள் வடிவமைக்கப்பட்டவை அதிக விலைகளிலும் விற்கப்படுகின்றன. தற்போது, குழுவினர் பயிற்சியாளரிடமிருந்து வணிக ஆர்டர்களைப் பெற்று வருவதுடன், தொழிலை விரிவுப்படுத்த பிற ஆர்டர்களையும் வரவேற்கின்றனர்.

இத்தொழிற்குழுவினர் வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து தொடக்க நிதியாக ரூ. 75,000/– பெற்று, அதில் 50,000/– ரூபாய்க்கு மூலப்பொருட்களை வாங்கினர். இந்தத் தொழிற்குழு புதியது என்பதால், தேவையின் அடிப்படையில் மட்டுமே பொம்மைகளை உற்பத்திச் செய்து வருகின்றனர். எனினும் இக்குழுவினரின் உற்பத்தி அதிகமாகவே உள்ளது. இத்தொழிற்குழுவினர் தங்கள் வருமானத்தை பிரித்துக் கொள்வதற்கு அடிக்கடி கூட்டம் நடத்தி கலந்துரையாடுகின்றனர். மேலும் இவர்களின் உற்பத்தியைப் பெருக்கி, மாதத்திற்கு ரூ. 40,000/– முதல் ரூ. 80,000/– வரை வருவாய் ஈட்ட திட்டமிட்டுள்ளனர்.






# சிறுதானியங்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்து அதிக வருவாய் பெறும் செங்காந்தள் தொழிற்குழு

விருதுநகர் மாவட்டம், காரியப்பட்டி வட்டாரம், வலுக்கலோட்டி ஊராட்சியில் ஓர் ஆண்டிற்கு 50–60 ஏக்கர்களில் 35 டன் சிறுதானியங்கள் உற்பத்திச் செய்யப்படுகின்றன. எனவே, அவற்றிலிருந்து மதிப்புக் கூட்டப்பட்ட பொருட்களை உற்பத்திச் செய்திட இப்பகுதியில் உள்ள மகளிருக்கு பயிற்சிகள் வழங்கத் திட்டமிடப்பட்டது. இப்பயிற்சிக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள மகளிர் 8ஆம் வகுப்பு முதல் 12 வரை படித்துள்ளனர். விவசாயத் தொழிலையும், 100 நாள் வேலை வாய்ப்பையும், ஆடு மேய்த்தலையும் மற்றும் எண்ணெய் ஆலைகளிலுள்ள வேலைகளையும் நம்பியுள்ளனர்.

எனவே முதற்கட்டமாக வலுக்கலோட்டி ஊராட்சியினை சேர்ந்த 20 மகளிருக்கு CSS பள்ளியில் 2022 ஏப்ரல் மாதம் முதல் 40 நாட்கள், விருதுநகரில் 'விருதுநகர் சிறுதானிய மிட்டாய்க் கடை' உரிமையாளரான திரு. ராஜசேகரன் என்பவர் மூலம் சிறுதானியங்களிலிருந்து, வெண்ணெய் குக்கீஸ், தேங்காய் எண்ணெய் குக்கீஸ், வெண்ணெய் முட்டை குக்கீஸ், பால் குக்கீஸ், கம்பு அல்வா, தினை லட்டு, தினை மிக்சர், தினை காராபூந்தி, மில்லட் முறுக்கு, ராகிசீவல் மற்றும் மில்லட் பிடி லட்டு போன்றவற்றை தயாரிக்கும் பயிற்சி அளிக்கப்பட்டது.

இந்தப் பயிற்சிக்குப் பிறகு 20 மகளிர் ஒன்றிணைந்து 'செங்காந்தள் தொழிற்குழு''வினைத் தொடங்கினர். இத்தொழிற்குழுவிற்கு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்திலிருந்து ரூ. 75,000/– தொடக்க நிதியாக வழங்கப்பட்டது. இந்தத் தொகையைக் கொண்டு மினி மாவு அரைக்கும் இயந்திரம், சீலிங் இயந்திரம், ஸ்டவ், பாத்திரங்கள், மூலப்பொருட்கள் மற்றும் மைக்ரோவேவ் அவன் போன்றவை வாங்கப்பட்டன.

முன்னர் 100 நாள் வேலை திட்டத்தில் ஈடுபட்டு தினசரி ரூ. 250/– மட்டுமே வருவாய் பெற்று வந்த இக்குழுவின் உறுப்பினர்கள் தற்பொழுது தங்களின் தயாரிப்புப் பொருட்களை விற்பனை செய்து வருவதன் மூலம் நாள் ஒன்றுக்கு ரூ. 550/– வரை வருவாய் ஈட்டுகின்றனர். தீபாவளி பண்டிகையின்போது, மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவகத்திற்கு இனிப்புப் பொருட்களை தயார் செய்து கொடுத்து ரூ. 25,000/– வரை வருவாய் பெற்றனர்.

இத்தொழிற்குழுவினர் தாங்கள் உற்பத்தி செய்யும் சிறுதானிய தின்பண்டங்களை உள்ளூர் கடைகள் மற்றும் பேக்கரிகள், வணிக வளாகம், நெடுஞ்சாலைக் கடைகள், அரசு அலுவலகங்களில் விற்பனை செய்வதுடன், மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தில் கடை அமைத்தும் விற்பனை செய்கின்றனர். மேலும் உள்ளூர் சுய உதவிக் குழுக்கள், விருதுநகர், காரியாப்பட்டி, அருப்புக்கோட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர் மற்றும் சிவகாசி ஆகிய பகுதிகளிலுள்ள கடைகளிலும் மொத்த ஆர்டர்களைப் பெற்று வருகின்றனர். ஆண்டுக்கு ரூ. 40,000/– முதல் ரூ. 80,000/– வரை வருவாய் ஈட்டத்திட்டமிட்டுள்ளனர். மேலும் இவர்கள் அந்தப் பகுதியிலுள்ள விருதரசி உழவர் உற்பத்தியாளர் நிறுவனம் மற்றும் கரிசல்காடு உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்களுடன் இணைந்து செயல்பட திட்டமிட்டுள்ளனர்.

தற்பொழுது இக்குழுவின் மகளிர் வங்கி பரிமாற்ற அறிவுத்திறன் கொண்டவர்களாகவும், தங்கள் குடும்பங்களை பாதுகாத்துக் கொள்ளும் தகுதியுடனும் உள்ளனர். பள்ளிப் படிப்பை முழுமையாக முடிக்காதவர்களுக்கு இது ஒரு மிகப்பெரிய சாதனையாகும். முயற்சி செய்யத் தயாராக உள்ளவர்களுக்கு எந்தத் தடையும் இல்லை என்பதை இது செங்காந்தள் தொழிற்குழுவின் வெற்றி நிரூபிக்கிறது.






# காளான் வளர்ப்புப் பயிற்சி மற்றும் மதிப்புக்கூட்டு உற்பத்தியில் வளமான காளான் தொழிற்குழு

குறைந்த இடங்களில் வேகமாக வளரும் காளான்கள், புரதங்களைத் தரும் எளிய உணவுத் தாவரமாகும். புரதங்களைச் சுமந்திருக்கும் காளான்களுக்கான தேவைகள் பெருகி வருவதால், பெண்கள் மற்றும் இளைஞர்களுக்கு வருமானம் ஈட்டும் சிறந்த தொழிலாக காளான் வளர்ப்பு உள்ளது. கூடுதல் வருமானம் கிடைக்கும் வழியான, காளான் வளர்ப்புப் பயிற்சி பெற தூத்துக்குடி மாவட்டம், கூட்டுடன்காடு கிராம ஊராட்சியில் வசிக்கும் மகளிர் முடிவு செய்தனர்.



கூட்டுடன்காடு ஊராட்சியைச் சேர்ந்த 20 பெண்களுக்கு 2022 ஏப்ரல் முதல் ஜூன் வரை அறிவிணையம் (Internet of Things - IoT) போன்ற மேம்பட்ட தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி, பயிற்சியாளர் திரு. குணாகுமார் ராஜா தலைமையில் சிப்பிக் காளான்களை வளர்க்கும் பயிற்சியுடன், இயற்கைப் பொருட்களைக் கொண்டு, காளான் வளர்க்கும் அறையில் கிருமி நீக்கம் செய்வது மற்றும் வளர்ப்புப் பைகள் செய்வது குறித்தும் விரிவான பயிற்சி வழங்கப்பட்டது.

பயிற்சி பெற்ற 17 பெண்கள் காளான் நிறுவனக் குழுவை உருவாக்கி, வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தால் வழங்கப்பட்ட 75 ஆயிரம் ரூபாயினைக் கொண்டு, செங்குத்துப் பைகளில் காளான்கள் பயிரிடப்படும் வகையில் 10 அடிக்கு 10 அடி கொண்ட கொட்டகைகள் அமைத்து, சிப்பிக் காளான்களைத் தொடர்ந்து பயிரிட்டு வருகின்றனர். காளான்களை முழுமையாக அறுவடை செய்ய, சராசரி ஒரு மாதம் ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

2022 செப்டம்பர் மாதம் 50 கிலோ காளான்களை அறுவடை செய்தவர்கள், தூத்துக்குடியில், உள்ளூரிலேயே விற்பனையகம் ஏற்படுத்தி, ஒரு கிலோ காளானை 200 ரூபாய்க்கு விற்பனை செய்தனர். மிஞ்சியப் பொருட்களை தூக்கிப் போடாமல், மண்புழு உரம் உற்பத்தி செய்து, 200 கிராம் மண்புழு உரம் 10 ரூபாய்க்கு, விற்பனை செய்து வருகின்றனர். இந்த உரங்களை தோட்டங்களில் பயன்படுத்த உள்ளூரிலேயே வாங்கிச் செல்கின்றனர். ஒரு தொகுதிக்கு (batch), பொதுவாக 12 – 20 கிலோ வரை அறுவடை செய்யலாம். குறைந்தது மூன்று முறை விளைச்சல் பெறலாம்.

இப்போது உறுப்பினர்கள் புதிய தொகுதியை (batch) ஏற்படுத்தி, 200 கிலோ விளைச்சல் எதிர்பார்க்கின்றனர். உறுப்பினர்கள் தொடர்ந்து விற்பனை முனைகளை ஏற்படுத்தி, தற்போது காளான்களை முழுமையாக விற்பனை செய்து வருகின்றனர். ஆனாலும், காளான்களை – காளான் சாறு, காளான் உணவு இனங்கள் முதலிய – மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களாக மாற்ற விரும்பி, அவற்றுக்கான பயிற்சி வாய்ப்புகளையும் எதிர்நோக்கி வருகின்றனர்.





# ஒன்றிணைந்த ஆதரவுடன் மேம்பட்ட சாந்தியின் சாதனைப் பயணம்...

மதுரை மாவட்டம் மேலமாத்தூர் ஊராட்சியில் ஒரு விவசாய குடும்பத்தில் பிறந்த சாந்தி,10ம் வகுப்புக்குமேல் கல்வியைத் தொடரவில்லை. பெண் சிசுக்கொலை அதிகம் நிலவிய மதுரையில் ஒரு பெண் பள்ளிக் கல்வி வரை வந்ததே முக்கிய மைல்கள் தான்.

எங்க ஊர்லயே, 10வது வரைக்கும் படிச்ச முதல் பெண் நான்தான் என்று புன்னகைத்தபடி பேசிய சாந்தி.பள்ளிப் பருவத்திலிருந்தே ஒரு தையல் கலைஞராக ஆக வேண்டும், என்கிற ஆசை எனக்கு இருந்தது. பள்ளியிலிருந்து நின்ற பிறகு ஒரு பழையதையல் இயந்திரத்தை வாங்கி துணிகளைத் தைத்து வருவாய்பெற்று வந்தேன். எனக்கு 2009ஆம் ஆண்டு எனக்கு திருமணம் நடைபெற்றது. பிறகு எங்கள் கிராமத்தில் செயல்பட்டு வந்த ரோஜா சுய உதவிக் குழுவில் என்னை இணைத்துக் கொண்டேன்.

சுய உதவிக் குழுவின் வங்கிக் கணக்கை பராமரித்து அதன் பரிவர்த்தனைகளை கவனித்து வந்த அனுபவம் நிறுவனம் தொடங்க கிடைக்கும் நிதியுதவி மற்றும் வாய்ப்புகளை எனக்கு கற்றுக்கொடுத்தது. 2016 ஆம் ஆண்டு, முத்ரா கடனுதவி திட்டத்தின் மூலம் ரூ.45,000/– கடனாகப் பெற்றேன். இந்தத் தொகையுடன் நான் சேமிப்பாக வைத்தி ருந்த பணத்தையும் சேர்த்து புதிய நவீனதையல் இயந்திரத்தை வாங்கினேன். புதிய தையல் இயந்திரம் மூலம் வருமானமும் அதிகமா கிடைச்சது. நான் வாங்கின கடன் தொகையை தவணைக்காலத்துக்கு முன்பே கட்டி முடிச்சிட்டேன்.

2020ஆம் ஆண்டு கொரோனா பெருந்தொற்றின் போது சுயஉதவிக் குழுக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இந்த இக்கட்டான சூழலில், தமிழ்நாடு அரசின் வாழ்ந்து காட்டுவோம் திட்டம் பாதிக்கப்பட்ட தொழில்களுக்கு முதலீட்டு நிதிக்கடன் வழங்குவது எனக்கு தெரிய வந்தது. உடனே விண்ணப்பித்து ரூ. 30,000/– கடனுதவியைப் பெற்று, எனது சேமிப்பு பணம் ரூ.20,000/–சேர்த்து தையல் இயந்திரங்களைப் பழுது பார்த்ததுடன், தொழிலுக்குத் தேவையான மூலப்பொருட்களையும் வாங்கினேன்.

என்னுடைய தொழில் மூலம் நான் ப்ளவுஸ் டிசைன், பேட்ச் வொர்க், எம்பிராய்டரி மற்றும் ஆரி வேலைப்பாடுகளை நிறைய பேர் விரும்புவதை தெரிஞ்சுக்கிட்டேன். 2021ஆம் ஆண்டு வாழ்ந்து காட்டுவோம் திட்டம் (VKP) ஏற்பாடு செய்தி ருந்த விழிப்புணர்வு கூட்டத்தில் பங்கேற்றேன். அதன் பிறகு வாழ்ந்து காட்டுவோம் திட்டத்தின் வழிகாட்டுதலுடன் மாவட்ட தொழில்துறை மையத்தில் (District Industries Centre) கடனுதவிக்கு விண்ணப்பித்தேன். எனக்கு 25% அரசு மானியத்துடன் ரூ.4,71,000/– கடனுதவிக்கான அனுமதி வழங்கப்பட்டது.

எனக்கு கிடைச்ச கடனுதவி மூலமா, நவீன தையல் இயந்திரமும், எம்பிராய்டரி டிசைன்களுடன் கூடிய கணினி மென்பொருளையும் நான் வாங்கியிருக்கேன். இப்ப மென்பொருள் பயன்படுத்தி ஒரு ப்ளவுஸ் தைக்க, பேட்டர்னுக்கு ஏத்தமாதிரி ரூ.1000/– முதல் ரூ. 5000/– வரை வாங்குறேன். வழக்கமான ஆர்டர்கள் மூலமே தினமும் ரூ. 4,000/– வரைக்கும் நான் சம்பாதிக்கிறேன்.

கணினி எம்பிராய்டரி இயந்திரத்தை வாங்கத் தயாராக இருக்குற எங்க சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு நான் பயிற்சிக் கொடுக்க தயாராக இருக்கேன் என்று தன்னம்பிக்கையுடன் கூறுகிறார் சாந்தி.

சுய உதவிக் குழு உறுப்பினரிலிருந்து தொழில் முனைவோராக மாறி வெற்றி பெற்ற சாந்தியின் சாதனைப் பயணம் மேலும் தொடர நமது வாழ்த்துகள்.





# பெண்களை அதிகம் தாக்கும் இரத்த சோகை நோய்

நம் ரத்தத்தில் இருக்கும் சிவப்பு அணுக்களில் ஏற்படும் குறைபாடுகளையே ரத்தசோகை (Anemia) என்கிறோம். இன்னும் கொஞ்சம் விளக்கமாக சொன்னால், இந்த சிவப்பு அணுக்களில் ஹீமோகுளோபின் என்ற நிறமிகள் இருக்கின்றன. நம் உடலின் செயல்பாட்டுக்குத் தேவையான ஆக்சிஜனை திசுக்களுக்கு எடுத்துச் செல்வது இந்த ஹீமோகுளோபின்கள்தான்.சிவப்புஅணுக்களின்எண்ணிக்கை குறைந்து, அதனால் ஹீமோகுளோபினின் செயல்பாடும் குறைந்து, அதனால் ஆக்சிஜன் எடுத்துச் செல்லப்படுவதும் தடைபடும் நிலையையே ரத்தசோகை என்கிறோம்.

வழக்கமாக ஹீமோகுளோபின் அளவு ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என மூன்று தரப்புக்கும் சிறிது வித்தியாசப்படும். ஆண்களுக்கு சராசரியாக 14.5 முதல் 15.5ஆவது/–I, பெண்களுக்கு 13.5 முதல் 14.5 ஆவது/–I இருக்க வேண்டும், குழந்தைகளுக்கு 16 முதல் 17 ஆவது/–I என கொஞ்சம் அதிகமாக இருக்கும். (ஒரு லிட்டர் ரத்தத்தில் 10ல் ஒரு பாகத்தை எடுத்துக்கொண்டு, அதற்குள் எத்தனை கிராம் ஹீமோகு ளோபின்கள் இருக்கின்றன என்பதைக் கணக்கிடுவார்கள்.அதனால்தான் 10ல் ஒன்று என்ற அர்த்தத்தில் Grams per deci litre என்று கணக்கிடுகிறார்கள்.)

இந்த ஹீமோகுளோபின் அளவு குறைவதை வைத்து ரத்தசோகை எந்த நிலையில் இருக்கிறது என்பதைக் கண்டுபிடிக்கலாம். ஹீமோகுளோபின் 10 முதல் 11 கிராம் இருந்தால் அது லேசான ரத்தசோகை, 9 முதல் 10 கிராமாக இருந்தால் அது மிதமான ரத்தசோகை, 8 கிராமுக்குக் கீழ் இருந்தால் அது தீவிர ரத்தசோகை என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

விபத்து, அறுவை சிகிச்சை, புற்றுநோய் போன்றவற்றால் உண்டாகும் ரத்த இழப்புகள், இரும்புச்சத்து, ஃபோலிக் அமிலம், பி12 போன்ற சத்துகள் கிடைக்காமல் போவது, பரம்பரை குறைபாடு, என்சைம்களில் ஏற்படும் கோளாறு, சிவப்பு அணுவின் அளவு குறைவது அல்லது வடிவம் மாறுவது, மலேரியா காய்ச்சல், ரத்தம் தானம் பெறும்போது ரத்த வகை மாறிப்போவது போன்ற காரணங்களால் ரத்த சோகை உருவாகலாம்.

இரும்புச்சத்து குறைபாடுகாரணமாகவே பெரும்பாலானவர்கள் ரத்தசோகைக்கு ஆளாகிறார்கள்.ஆண்கள், பெண்கள், குழந்தைகள் என்று எல்லாத் தரப்பினருக்கும் ரத்தசோகை ஏற்படும் என்றாலும், பெண்கள்தான் இதில் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள். பருவம் அடைவது, மாதவிலக்கு, பிரசவம் போன்றவற்றால் பெண்கள் இயல்பாகவே அதிக ரத்த இழப்பை சந்திக்கிறார்கள். தாய்ப்பால் கொடுக்கிற பெண்களுக்கு தேவைக்கேற்ற இரும்புச்சத்து கிடைக்காத போதும் ரத்தசோகை ஏற்படுகிறது. இதனால் குழந்தைக்கும் போதுமான இரும்புச்சத்து கிடைக்காமல் போகும். அதனால், பெண்கள் கவனமாகத் தங்களைப் பார்த்துக்கொள்ள வேண்டும். குடும்பத்தினரும் இந்த விஷயத்தில் பெண் குழந்தைகளின் மேல் கூடுதல் அக்கறை காட்டுவது நல்லது.

சோர்வு, தூக்கம் வருவது போன்ற உணர்வு, பசியின்மை, எந்த செயலிலும் ஆர்வத்தோடு ஈடுபட முடியாதது, மூச்சு வாங்குவது, நாக்கு, கண்களின் கீழ் பகுதி, மேலண்ணம் போன்ற இடங்கள் சிவந்த நிறத்தை இழந்து வெளுப்பாக மாறிவிடுவது, விரல் நகம் மேடாக இல்லாமல் தட்டையாக காட்சியளிப்பது போன்ற அறிகுறிகள் ரத்தசோகை இருப்பவர்களிடம் வெளிப்படையாகத் தெரியும். ரத்தசோகையின் இந்த அறிகுறிகள் தெரிந்தால் ரத்தப் பரிசோதனை நிலையத்தில் சென்று பரிசோதனை செய்து பார்த்துக் கொள்ளலாம். காலையில்தான் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பதோ, சாப்பிடுவதற்கு முன்புதான் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்பதோ கிடையாது.

சரிவிகித உணவு சாப்பிடுகிறவர்களுக்கு ரத்தசோகை வருவது இல்லை. கீரை வகைகள், முட்டை, பால், இறைச்சி, பேரீச்சம்பழம் போன்றவற்றை உணவில் தவறாமல் சேர்த்துக் கொள்வதன் மூலம் ரத் தசோகை ஏற்படாமல் தடுக்க முடியும்.குறிப்பிட்ட வயதுக்கு மேல் ஜீரண சக்தி குறையும் போது மாத்திரை, ஊசி வழியாகவும் அந்த குறைபாட்டை சமன்படுத்த முடியும்.

Published by S. CHINNAPPAN, on behalf of MUTRAM SOCIETY from Tamilnadu Corporation for Development of Women's Ltd., Printed by V. RAMESH, Chennai Micro Print Private Ltd., New No. 130 / Old No. 34, Nelson Manickam Road, Aminjikarai, Chennai – 600 029. Published from (90,000 Copies Circulated) Tamilnadu Corporation for Development of Women's Ltd., Annai Teresa Mahalir Valagam, Valluvarkottam High Road, Nungambakkam, Chennai - 600 034, Editor : S. CHINNAPPAN.




சுய உதவிக் குழுக்களின்
செயல்பாடுகளை அறிந்திட
**முற்றம் படியுங்கள்!**

முற்றம் மேலும் மேலும்
வளர்ந்திட உங்களின்
**ஆதரவை
தாருங்கள்!**

முற்றத்திற்கு சந்தா
**செலுத்திடுங்கள்!**

புத்தகத்தைப் படிக்க என்னை
**Scan செய்யவும்**

| முற்றம் இதழின் சந்தா விபரம் | |
|---|---|
| ஒரு ஆண்டு | ரூ. 240/- |
| இரண்டு ஆண்டு | ரூ. 450/- |
| மூன்று ஆண்டு | ரூ. 680/- |

| விளம்பரக் கட்டணம் | |
|---|---|
| அட்டையின் 2-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் 3-வது பக்கம் | ரூ. 50,000/- |
| அட்டையின் பின்பக்கம் | ரூ. 50,000/- |
| புத்தகத்தின் உள்பக்கம் | ரூ. 35,000/- |

முற்றத்திற்கு செலுத்தும் சந்தாத் தொகையினை முற்றம் (MUTRAM) என்ற பெயரில் சென்னையில் மாற்றத் தகுந்த வகையில் வங்கி வரைவோலையாக எடுத்து அனுப்பவும். வரைவோலையுடன் உங்கள் பெயர், குழுவின் பெயர், கதவு எண், தெருவின் பெயர், ஊராட்சியின் பெயர், தாலுக்கா, மாவட்டம் மற்றும் அஞ்சலக எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவும்.

**வாசகர்கள் முற்றம் இதழ் குறித்த உங்களின் விமர்சனங்களை உங்கள் குழுவின் அஞ்சல் முகவரி மற்றும் புகைப்படத்துடன் முற்றம் இதழிற்கு அனுப்பலாம். சிறந்த விமர்சனங்கள் புகைப்படத்துடன் பிரசுரிக்கப்படும்.**

**விமர்சனங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி**

**முற்றம் மாத இதழ், தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவனம்,**
அன்னை தெரசா மகளிர் வளாகம், 1வது மாடி, வள்ளுவர் கோட்டம் நெடுஞ்சாலை,
நுங்கம்பாக்கம், சென்னை - 600 034.

RNI No. TNTAM/1999/02733-TAMILNADU MAKLIR MAMPATTU MURTRAM R.DIS. 344/2019
Reg.No. TN/CH/(C)/455/2021-2023 & Licensed to Post Under without Prepayment TN/PMG(CCR)/WPP-564 / 2021-2023
Date of Publication : 1st Week of the every month Posted between 25th – 31th December 2022 Posted at Patrika Channel, Egmore



"எங்கள் வாழ்வும், எங்கள் வாழ்வாதாரமும்,
எங்கள் கையில் என சங்கே முழங்கு!"

TNULM

TAMIL NADU URBAN LIVELIHOODS MISSION

*Empowering Lives*

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதார இயக்கத்தின் மூலம்
நகர்ப்புற ஏழை எளிய மக்கள், தெருவோர வியாபாரிகள் மற்றும் நகர்ப்புற வீடற்றோருக்காக
பல்வேறு திட்டங்களை தீட்டி தமிழக அரசு சீரிய முறையில் செயல்படுத்தி வருவது
பெருமைக்குரியது.